

Taxi Bot ஆல் மெருகேறும் டெல்லி ஏர்போர்ட்

மலர்: 3 இதழ்: 8 மே: 28-2025 விலை: 20/-

RNI No: TNTAM/2023/88623

# தமிழ்நாடு டுடே



## முதலமைச்சரின் டெல்லி விசிட்..
## பாய்ச்சலா? பதுங்கலா?

### நீதிபதிகளை ஜாதி ரீதியாக வசை பாடும் திமுக..
### இந்து முன்னணி கண்டனம்..

### செயல் புலியாகும் துரை வைகோ..

உற்சாகத்தில் தொகுதி மக்கள்!

# தமிழன் FOUNDATION

INFINITY SERVICE

NITI AYOG 80G /12A APPROVED

கல்வி | பெண்கள் முன்னேற்றம் | பசுமை பாதுகாப்பு | சமூக பாதுகாப்பு
முதியோர் காப்பகம் இல்லா நிலை மாற முயற்சி செய்தல்

www.thamizhanfoundation.com

Search on Google! thamizhan foundation



# HELP TO EDUCATE SOMEONE

THAMIZHAN FOUNDATION

Scan To Help

Regd 4/88/2023

**THAMIZHAN FOUNDATION**

**7/138, Ayothya Nagar, Triplicane, Chennai - 600 005.**

# தமிழ்நாடு டுடே

19 நாட்களுக்கு ஒருமுறை
RNI No: TNTAM/2023/88623



**சதீஷ்குமார்.S**
வெளியீட்டாளர் ஆசிரியர்
+(91) 9500843434
மின்னஞ்சல்: editor@tamilnadutoday.in

| | | | |
|---|---|---|---|
| **விக்னேஷ்.S** | **சுதாகர்.R** | **வெங்கடேஷ்.K** | **கவிஞர் க.கந்தன்** |
| நிர்வாக ஆசிரியர் | துணை ஆசிரியர் | செய்தி ஆசிரியர் | உள்ளடக்க ஆசிரியர் |

**இணை ஆசிரியர்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| Dr.M. ஷேக் மொஹிதீன் (Social Media) & தலைமை ஆலோசகர் | B. பாலமுருகன் (Data Management) | R. டில்லிகுமார் (சட்டக் குழு) | Dr.பொன் பலராமன் (மக்கள் தொடர்பு) | G. ராஜபாண்டியன் (செய்தியாளர்கள் ஒருங்கிணைப்பு) |

**நிர்வாக சட்ட ஆலோசகர்கள்**

TCS. ராஜா சொக்கலிங்கம். B.CO ., BL
முதன்மை நிர்வாக சட்ட ஆலோசகர்
(ஓய்வு பெற்ற நீதிபதி)
குடும்ப நல நீதிமன்றம் சென்னை- 104

R.K. இளஞ்செழியன் B.SC, B.L
உயர் நீதிமன்றம்
முதன்மை வழக்கறிஞர்

மின்னஞ்சல்: tamilnadutoday24@gmail.com தொலைபேசி எண்: +91 9003014445










தமிழ்நாடு டுடே 19 நாட்களுக்கு ஒரு முறை வெளிவரும் தமிழ் இதழ். ஜாதி மதம் இனம் அரசியல் சார்பற்ற நடுநிலை இதழ். மக்களின் பிரச்சினைகளுக்கு துறை ரீதியாக தீர்வு காண முயற்சிப்பதும், அரசு நிர்வாகத்தின் செயல்பாடுகளை பாமரனும் தெரிந்து கொள்ளும் வகையில் பாலமாய் விளங்குவது தமிழ்நாடு டுடே.

**தமிழ்நாடு டுடே மாவட்ட நிருபர்களைப் பற்றி தகவல் தெரிந்து கொள்ள தமிழ்நாடு டுடே இணையதளத்தை அணுகவும்.**

தமிழ்நாடு TODAY
www.tamilnadutoday.in


**தமிழ்நாடு டுடே பத்திரிகையில் வெளியாகும் விளம்பரம் அனைத்தும் விளம்பரதாரரை சார்ந்தது.**
**விளம்பரத்தை வெளியிடும் உரிமை மட்டுமே தமிழ்நாடு டுடே பத்திரிக்கையை சார்ந்தது.**

# நாட்டாமை தீர்ப்பை மாத்து!

## ஒன்பது குடும்பங்களுக்காக வக்காலத்து செய்யும் அதிகாரிகள்..



















ஊரை விட்டு ஒதுக்கி வைத்த .9. குடும்பத்திற்கு ஆதரவாக முன்னாள் முதல்வர் கருணாநிதி பிறந்த நாளில் சமூக நீதி காத்திடும் காத்திருப்பு போராட்டம் அறிவிப்பு



தென்காசி மாவட்டம் சாம்பவர் வடகரை யில் மிகவும் பிரசித்தி பெற்ற அம்மன் கோயில் ஒன்று உள்ளது கோயிலின் வரி சம்பந்தமாக வரி செலுத்தாத ஏழை எளிய குடும்பத்தினை சேர்ந்த ஒன்பது குடும்பத்தினரையும் கோயில் நிர்வாக கமிட்டியினர் ஊரை விட்டு விலக்கி வைத்தனர், இச்சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது எதிர் தரப்பினர் மாவட்ட ஆட்சியரிடம் நேரில் சென்று மனு கொடுத்தும் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு கொடுத்தும் இதுவரையில் நியாயம் கிடைக்கவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் வருத்தம் தெரிவித்தனர்.

இதனை அடுத்து தென்காசி மாவட்டம் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் )சார்பில் தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில்

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் வட்டம் சாம்பவர் வடகரை பேரூராட்சியில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள் இதில் நாடார் சமூகத்தைச் சேர்ந்த மக்களும் அதிக அளவில் வசித்து வருகிறார்கள்

சாம்பவர் வடகரை கீழூர் நாடார் சமுதாயத்தைச் சேர்ந்த வெங்கடேஷ் என்பவர் ஊர் நாட்டாமையாக இருந்து வருகிறார் மேலும் பல ஊர் நண்பர்களும் நிர்வகித்து வருகிறார்கள், அங்கு 9 குடும்பங்களை ஒரு வருடங்களுக்கும் மேலாக ஊரை விட்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது இதில் கால்நடை அரசு மருத்துவராக திரு. பாஸ்கர் என்பவரின் மகள் சாதி மறுப்பு திருமணம் செய்ததால் அவர்களையும் ஊரை விட்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதாகவும்

இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை சார்ந்த அலுவலரிடம் பலமுறை மனு அளித்தும் எந்த வித நடவடிக்கையும் எடுக்காமல் காலம் தாழ்த்தி வந்ததால் கடந்த பிப்ரவரி மாதம் பத்தாம் தேதி தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காத்திருப்பு போராட்டம் என அறிவிக்கப்பட்டது

ஆனால் பிப்ரவரி 9ஆம் தேதி அன்று கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்தில்(14-02-2025 )சமாதான கூட்டத்திற்கு அழைப்பானை அனுப்பி சமாதான பேச்சு நடைபெற்றது, அதில் பாதிக்கப்பட்ட ஒன்பது குடும்பத்தினரும் மற்றும் ஊர் நிர்வாகத்தினரும் கலந்து கொண்டார்கள் ஆனால் துறை சார்ந்த அலுவலர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை

மேற்படி 19-02-2005 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் குடியேறும் போராட்டம் நடைபெற்றது அப்போது போராட்டக்காரர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள் இது அறிந்த தேசிய மனித உரிமைகள் ஆணையம் தானாக முன்வந்து தென்காசி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க ஆணை பிறப்பித்தது, ஆனால் இன்றுவரை எந்த ஒரு நிவாரணமு ம் கிடைக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்கள் ஆகையினால் 03-06-2025 அன்று முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் அன்று சமூகநீதி காத்திட வேண்டும் என்று பாதிக்கப்பட்ட ஒன்பது குடும்பத்தாரையும் இணைத்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக தென்காசி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கோரிக்கை நிறைவேறும் வரை காத்திருப்பு போராட்டம் என அறிவிக்கப்பட்டுள்ளது

பல கட்ட போராட்டங்கள் நடத்தியும் ஊரை விட்டு ஒதுக்கி வைக்கப்பட்ட ஒன்பது குடும்பத்தினருக்கும் நீதி கிடைக்கவில்லை என்று கோரிக்கை வலுத்து வருகிறது உடனடியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்..

**J அமல்ராஜ் தென்காசி**

# கலைச்சித்தனின்
# 'எனக்கு நானே சரணாலயம்'












பெண்ணை நதிக்கரையில் அமைந்து பல வரலாற்று சிறப்புகளை தன்னகத்தே கொண்டுள்ள புராதன நகரமாம் திருக்கோவிலூரைச் சார்ந்த கவிஞர் கலைச்சித்தன் என்கிற

மு. ராமகிருஷ்ணன் அவர்கள் தனக்கு இயன்ற வகையில் தமிழ்க் கவிதை மற்றும் இலக்கிய படைப்புகளை படைப்பது, நாளேடு மற்றும் மாத பத்திரிகைகளில் அவ்வப்பொழுது கவிதை மற்றும் கட்டுரைகள் வரைவது உள்ளிட்ட பல வகையில் தமிழ்ப் பணி ஆற்றி வருகின்றார். அவ்வகையில் கடந்த 25.05.2025, ஞாயிறு அன்று திருக்கோவிலூரில் அமைந்துள்ள 'திருக்கோவிலூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி' வளாக அரங்கில் கவிஞர் கலைச்

சித்தனின் 'எனக்கு நானே சரணாலயம்' 'பாதரச பூக்கள்'

'கனவுப் பெட்டகம்' என்ற மூன்று கவிதை நூல்களின் ஒரு சேர்ந்த வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது.

'சங்கர காவியம்' என்ற காப்பிய நூலை கடந்த ஆண்டு வெளியிட்டு ஆன்மீக அன்பர்களின் உள்ளங்களை கொள்ளை கொண்ட கவிஞர் கலைச்சித்தன் இம்முறை தனது மூன்று கவிதை நூல்களினூடே மானுட வாழ்வின் பல்வேறு பரிமாணங்களை பரிணாமங்களை தனது கவிதையின் வாயிலாக இச்சமுதாயத்திற்கு கடத்த முயன்றிருக்கின்றார். எனக்கு நானே சரணாலயம் என்ற தலைப்பில் அமைந்த கவிதைகள்

மானுட வாழ்வியலின் பல்வேறு கூறுகளை அழகாக மொழிபெயர்க்கிறது. கவிதைப் புத்தகத்தின் தலைப்பே நம்மை ஏதோ ஒரு வகையில் கவர்ந்திழுக்கிறது. கவிஞரின் 'எனக்கு நானே சரணாலயம்' அல்லலுற்று அலைபாயும் பல மானுட மனங்களுக்கும் சரணாலயமாக அமையும் என்பது திண்ணம்.

பாதரச பூக்கள் என்ற வித்தியாசமான தலைப்பிற்கு ஏற்றவாறு அதில் அமைந்துள்ள ஒவ்வொரு கவிதையும் பூக்களாக மலர்ந்து மணக்கிறது.

கவிஞரின் கனவுப் பெட்டகம் என்ற நூலில் அமைந்த கவிதைகள் கவிஞரின் கனவுகளை மட்டும் சுமக்காமல் அந்த கவிதைகளை வாசிக்கும் அனைத்து மனங்களின் கனவுகளையும் சுமப்பதோடு இன்பத்திலும் லயிக்க வைக்கிறது, துன்பத்திலும் மிதக்க வைக்கிறது என்றால் அது மிகையில்லை.

கவிதைகளின் வாசிப்பும் நேசிப்பும் படிப்படியாக குறைந்து வரும் நவீன யுகத்தில் கவிதையின்மேல் கவிஞர் கொண்டுள்ள காதலும் பற்றுதலும் பாராட்டுக்குரியது.

இவரது கவிதைகள் நிறைய மனங்களுக்கு இளைப்பாறுதல் தரும். இவரது கவிதைகள் சோர்வுற்ற மனங்களுக்கு புது தெம்பூட்டும். இவரது கவிதைகள் சில இடங்களில் புரட்சிகர சிந்தனைகளை தூண்டும். இவரது கவிதைகள் ஆன்மதேடலுக்கு அஸ்திவாரமாக அமையும். இவரது கவிதைகள் மானுடத்தின் அவலங்களை பாடும், அந்த அவலங்கள் மாறுவதற்கான தீர்வையும் கூறும்.

நமது 'தமிழ்நாடு டுடே' இதழிலும் அவ்வப்பொழுது கவிதைகள், கட்டுரைகள் தீட்டி வரும் கவிஞர் கலைச்சித்தனின்

தமிழ்ப் பணி பெருகிச் சிறந்திட நமது 'தமிழ்நாடு டுடே' மாத இதழ் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.


**V.ஜெயசங்கர்**
**கள்ளக்குறிச்சி PRO**
**தமிழ் நாடு டுடே**



# தமிழகத்திலிருந்து ராஜ்யசபாவிற்கு செல்லப்போகும் எம்பிக்கள் யார்? யார்?

தமிழகத்தில் இப்போதுள்ள ராஜ்யசபா எம்பிக்களில் திமுகவை சேர்ந்த வக்கீல் வில்சன், சண்முகம் தொழிலாளர் முன்னேற்ற சங்கத் தலைவர், எம்.எம். அப்துல்லா, மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, அதிமுக சந்திரசேகரன், பாமக அன்புமணி ராமதாஸ் ஆகியோரின் பதவிக்காலம் வரும் 2025 ஜூலை 24 ஆம் தேதி நிறைவடைகிறது. காலியாகும் 6 எம்பி இடங் களுக்கான தேர்தல் அறிவிப்பை இந்திய தேர்தல் கமிஷன் ஜூன் மாதம் வெளியிடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த எம்பி பதவிகளைப் பிடிக்க எல்லா கட்சிகளில் போட்டா போட்டி நடக்கிறதாம். யாரெல்லாம் எம்பி ரேசில் உள்ளனர் என்று விஷயம் தெரிந்தவர்களிடம் கேட்டால்...

திமுகவை பொறுத்தவரை பல்கலைக்கழக துணைவேந்தர்கள் சட்ட மசோதா விவகாரத் தில் கவர்னர் ரவிக்கு எதிராக வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பை பெற்று தந்ததற்கு பரிசாக மீண்டும் வக்கீல் வில்சனுக்கு எம்பி பதவி வழங்க " ஸ்டாலின் முடிவு எடுத்திருப்பதாக சொல்லப் படுகிறது. ஏற்கனவே முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு மெரினாவில் நினைவி டம் அமைக்க ஹைகோர்ட்டில் வாதாடி வென்றதற்காக அவருக்கு ராஜ்யசபா எம்பி பதவியை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்

என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக துணை முதல்வர் உதயநிதி யின் பரிந்துரையால் ராஜ்யசபா எம்பியான எம்.எம். அப்துல்லா மீண்டும் ராஜ்யசபா எம்பி யாக தொடர வாய்ப்பு அதிகம் உள்ளதாக திமுக வட்டாரத்தில் பேசப்படுகிறது. அடுத்த ஆண்டு 2026 தமிழக சட்டசபைக்கு பொதுத்தேர்தல் நடக்கிறது. இதை மனதில் வைத்து தவெக கட்சியின் தலைவர் நடிகர் விஜய்க்கு போட்டி யாக தேர்தல் பிரச்சாரத்துக்கு பயன்படுத்திக் கொள்ளும் வகையிலும், மக்கள்நீதி மயம் கட்சி தலைவர் நடிகர் கமலஹாசனுக்கு ராஜ்யசபா சீட்டு வழங்க திமுக தலைவர் முடிவெடுத்திருப் பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ வுக்கு மீண்டும் ராஜ்யசபா எம்பி பதவி வழங்கு வதில் திமுகவில் இருவிதமான 'கருத்துக்கள் நிலவி வருகின்றன. விரும்பி கேட்டால் மீண்டும் வைகோவுக்கு அந்த எம்பி பதவி வழங்கலாம் என்பது திமுக தலைவர்கள் முடிவு. ராஜ்யசபா எம்பி பதவிக்கு பதிலாக சட்டசபை தேர்தலில் கூடுதல் தொகுதிகள் கேட்கலாம் என்ற எண்ணம் மதிமுக தலைமை க்கு இருப்பதாக பேசப்படுகிறது. எனவே திமுக சார்பாக எம்பிக்கு தேர்வு செய்யப்பட இருப்பவர் ஆர்.எஸ். பாரதியா? அல்லது வேறு ஒருவரா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த விவகாரத்தில் அதிமுகவை பொறுத் தவரை பாஜகவுடன் தற்போது கூட்டணி அமைத்தாலும் பாமகவுடன் கூட்டணிக்கு வாய்ப்பு இருப்பதாக கருதுவதால், இம்முறை 2 எம்பிக்களை ராஜ்யசபா விற்கு அனுப்பும் வாய்ப்பு அதிமுகவுக்கு கிடைத்துள் ளது. கடந்த முறை அதிமுக சார்பில் பாமகவின் அன்பு மணி ராமதாஸ் எம்பியாக ராஜ்யசபாவிற்கு அதிமுக சார்பாக அனுப்பி வைக்கப் பட்டார். 2024 லோக்சபா தேர்தலில் பாஜக அணிக்கு பாமக போய்விட்டது. எனவே இந்த முறை அன்பு மணிக்கு அதிமுக இந்த வாய்ப்பை வழங்குமா என்பது சந்தேகமே.

2026 சட்டசபை தேர்தலுக்குப் பிறகு வரும்ராஜ்யசபா தேர்தலில் வேண்டுமானால் பாமக வுக்கு ஒரு ராஜ்யசபா எம்பி என்று கூட்டணி ஏற்படும் பொழுது சொல்லுவதற்கு சான்ஸ் இருக்கிறது. அதே போன்று தேமுதிகவுக்கு ராஜ்ய சபா எம்பி சீட் பற்றி எந்த உத்தரவாதமும் தர வில்லை என்று ஏற்கனவே எடப்பாடி பழனிசாமி சொல்லிவிட்டார். ஆனால் ராஜ்யசபா எம்பி தருவதாக கூறித்தான் எங்களை கூட்டணியில் சேர்த்தார் என தேமுதிக தற்பொழுது பகிரங்கமாக வெளியில் சொல்லி மிரட்டி வருகிறது. இந்த நிலையில் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் பட்டியல் இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கும், அதிமுகவில் ராஜ்யசபா எம்பி பதவி வழங்க வேண்டும் என்பது பழனிச் சாமியின் எண்ணமாக இருக்கிறதாம். அந்த வகையில் முன்னாள் எம்பி அன்வர் ராஜாவுக் கும், முன்னாள் சபாநாயகர் தனபாலுக்கும் வாய்ப்பு கிடைக்கும் என்று அதிமுகவினர் எதிர்பார்க்கின்றனர். தமிழகத்திலிருந்து ராஜ்ய சபாவிற்கு செல்லவிருக்கும் எம்பிக்கள் யார் என்பதற்கான விடை இந்த மாதம் தெரிந்து விடும் என சொல்லி முடிக்கின்றனர் அரசியல், நோக்கர்கள்.

**சங்கர ராமன்** RB
**உள்ளடக்க எழுத்தாளர்**



# தமிழக முதல்வருக்கு ஆயக்குடி பொதுமக்கள் சார்பாக கோரிக்கை

திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் ஆயக்குடி கிராமத்தில் சுமார் 100 ஆண்டுகளுக்கு மேல் பழமையான தொடக்கப்பள்ளி உள்ளது

இந்தப் பள்ளியினை ஆயக்குடியின் வயது முதிர்ந்த நபர்கள் இங்கிலீஷ் பள்ளிக்கூடம் இன்று கூறுவார்கள் ஏனென்றால் சுதந்திரத்திற்கு முன்பே துவங்கப்பட்ட பள்ளி என்பதால் இந்த பெயர் வழக்கமாக அழைக்கப்பட்டது

சுதந்திரத்திற்கு பின் இந்தப் பள்ளி தமிழக அரசு தொடக்கப்பள்ளி என்றும் பிறகு பழனி ஒன்றிய ஊராட்சி துவக்கப்பள்ளி என்றும் நடைமுறையில் இருந்தது 6 மாதங்களுக்கு முன்பு இந்த பள்ளி ஆயக்குடி பேரூராட்சி நிர்வாகத்தின் கீழ் செயல்படும் என்று கல்வித் துறையினால் அறிவிக்கப்பட்டுள்ளது

இந்தப் பள்ளியின் வளர்ச்சிக்காக ஆயக்குடி சளியாபுலி சந்தன கருப்பக் குடும்பன் பள்ளி கட்டிடங்களை கட்டித் தந்து மற்றும் பல்வேறு உதவிகளை செய்துள்ளார் மற்றும் பல்வேறு சமூக மக்களும் இந்த பள்ளிக்கு பல்வேறு வகையில் மேம்பாட்டுக்கான உதவிகளை செய்து பாதுகாக்கப்பட்டு வந்தது

இந்தப் பள்ளியின் ஒரு பகுதி ஆயக்குடி இளைஞர் நற்பணி மன்றம் மற்றும் ஊர் பெரியோர்களால் பல்வேறு முயற்சியில் உயர்நிலைப் பள்ளியாக மாற்றப்பட்டது

இப்பொழுது தமிழக அரசு உயர்நிலைப் பள்ளி என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது ஆயக்குடி அரசு உயர்நிலைப்பள்ளி என்பது ஒரு வரலாற்று சிறப்புமிக்க அரசுப் பள்ளியாகும் இங்கு படித்த பள்ளி மாணவர்கள் இன்று பாராளுமன்ற உறுப்பினர்களாகவும், சட்டமன்ற உறுப்பினர்களாகவும் ,கல்லூரி பேராசிரியர்கள் ஆகவும், மாவட்ட ஆட்சியர்கள் ஆகவும், கோட்டாட்சியர்களாகவும், வட்டாட்சியர்களாகவும், கிராம நிர்வாக அலுவலர்களாகவும், ஆசிரியர்களாகவும், அரசியல்வாதிகளாகவும், தொழிலதிபர்களாகவும், இந்தப் பகுதியில் வாழும் மற்றும் பல்வேறு கிராமங்களில் தமிழகம் கடந்தும் பணியாற்றி வருகின்றனர்

இந்தப் பள்ளிக்கு இப்பொழுது சில நெருக்கடிகள் உருவாகியுள்ளது ஆயக்குடியில் இலவச பயிற்சி மையங்கள் நடத்துவதும் ஆயக்குடி பொதுமக்கள் பல்வேறு அரசு தேர்வுகளில் அதிகாரிகளாகவும் வெற்றியடைவதும் கருத்தில் கொண்டு ஆயக்குடி அரசு உயர்நிலைப் பள்ளியிலும் தொடக்கப் பள்ளியிலும் கொடைக்கானலை சேர்ந்த மலைவாழ் மக்கள் குழந்தைகளை இங்கு சேர்க்க விரும்புகின்றனர்

அதன்படி ஆயக்குடி அரசு துவக்க பள்ளியிலும் உயர்நிலைப்பள்ளியிலும் பல்வேறு எஸ்சி, எஸ்டி மாணவர்கள் படித்து வந்தனர்

இவர்கள் கொடைக்கானல் மலையில் இருந்து ஆயக்குடிக்கு பயணம் செய்து படிக்க முடியாது என்பதால்

ஆயக்குடியில் அரசு மாணவியர் விடுதி அமைக்கப்பட்டு அதில் தங்கி படித்து வந்தனர்

இந்த அரசு மாணவியர் விடுதி சில நாட்களுக்கு முன் பழுதாகி இடிந்ததால் அது தகுதியற்ற இடமாக அறிவிக்கப்பட்டு 2 ஆண்டுகளாக பூட்டி வைக்கப்பட்டுள்ளது

மீண்டும் ஆயக்குடி ஆதிதிராவிடர் மாணவர் விடுதியை திறக்க முயற்சிக்காமல்

ஆயக்குடி பேரூராட்சி அருகில் உள்ள திருநகரில் ஒரு தனியார் கட்டிடத்தில் வாடகைக்கு ஒரு இடம் தேர்வு செய்து அங்கு மாணவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்

மாணவர்கள் தங்கியுள்ள இடத்திற்கும் அவர்கள் பள்ளிக்கு வரவேண்டும் என்றால் ஒரு கிலோமீட்டர் நடந்து செல்ல வேண்டி உள்ளது அதன் பின்பு பேருந்தில் பயணித்து ஆயக்குடி அரசு தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிக்கு வர வேண்டி உள்ளது

இது மாணவர்கள் மத்தியில் சிரமம் உள்ளதாக பெற்றோர்களும் மாணவர்களும் இந்த பள்ளியை தவிர்த்து வேறு பள்ளிகளுக்குச் சென்று அங்கு உள்ள ஆதிதிராவிடர் விடுதியில் தங்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது

இதனால் 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் பள்ளியில் சேர்க்கை முற்றிலும் தடைபடும் சூழல் உள்ளது

இந்த நிலை நிகழ்வதற்கு அரசின் அலட்சியம் மற்றும் கவனமின்மை என்பது தான் உண்மை இதை உடனடியாக தமிழக அரசு ஆதி திராவிடர் நலத்துறை மற்றும் கல்வித்துறை அதிகாரிகள் மூலம் சரி செய்து

ஆதிதிராவிடர் மாணவியர் விடுதியை திறந்திட தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுவே ஆயக்குடி பொதுமக்களின் கோரிக்கையாகும் நன்றி

ஆயக்குடி அ.செல்வா ஜீ.....

தொகுப்பு..

**A. P. Thillai Chidambaram**
**Editor- Dindigul dt.**
**(Thillai graphics-photos..**
**Oddanchatram )**



# திமுகவின் அநாகரிக பேச்சு மற்றும் ஜாதிய வன்மத்திற்கு கண்டனம்

உயர் நீதிமன்ற நீதிபதிகளை ஜாதி ரீதியாக வசை பாடுவதை திமுகவினர் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும்!

இந்து முன்னணி மாநிலத்தலைவர் காடேஸ்வரா சி. சுப்ரமணியம் அவர்கள் அறிக்கை..

பல்கலைக்கழக துணைவேந்தர்களை நியமிப்பதற்கு தமிழக அரசுக்கு அதிகாரம் வழங்கிய சட்டப்பிரிவுக்கு தடைவிதித்து உயர் நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

இதை தாங்கிக் கொள்ள முடியாத திமுகவினர், நீதிபதிகள் ஜி. ஆர். சுவாமிநாதன், லட்சுமி நாராயணன் ஆகிய நீதிபதிகளை ஜாதி ரீதியாக தாக்கிப் பேசி வருகின்றனர். இவர்களெல்லாம் பிராமண சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இது ஒரு பிராமண நீதிமன்றம் என்றும் வசைபாடி வருகின்றனர்.

நீதிமன்றம் என்பது நமது ஜனநாயக நாட்டின் இறையாண்மையைக் காக்கும் இடமாகும். பாரபட்சம் இல்லாமல் நீதி வழங்கி சட்டத்தை பாதுகாக்கும் நீதிபதிகளை இவ்வாறு பேசுவது கண்டனத்துக்குரியதாகும்.

தி.மு.க என்ன நினைக்கிறதோ ன, எதற்காக வழக்கு தொடுத்து இருக்கிறதோ அது அவர்களுக்கு சாதகமாகவே தீர்ப்பு எழுதப்பட வேண்டும் என்று நீதிமன்றத்திடம் எதிர்பார்க்கின்றனர்.

திமுக பல வழக்குகளை உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் தொடுத்துள்ளது. திமுகவிற்கு ஆதரவாக தீர்ப்பு வந்தால் இது திராவிடத்திற்குக் கிடைத்த வெற்றி, சமூக நீதிக்குக் கிடைத்த வெற்றி என்று குதூகளிப்பார்கள். அவர்களுக்கு எதிரான தீர்ப்பு வரும் போது ஜாதியை கையில் எடுத்துதங்களின் வக்கிர புத்தியைக் காட்டுவார்கள். நமது ஜனநாயகத்தையும், இறையாண்மையையும், நமது பண்பாடு கலாச்சாரங்களையும்

தி.மு.க பலமுறை கொச்சைப்படுத்தி இருக்கிறதை பட்டியலிட முடியும்.

உச்சபட்ச அதிகாரம் கொண்ட நீதித்துறையையும் தி.மு.கவினர் விட்டு வைப்பதில்லை. யு.ஜி.சி எனப்படும் பல்கலைக்கழக மானிய குழுவிடமிருந்து நிதி பெற்றே அனைத்து பல்கலைக்கழகங்களும் இயங்குகின்றன. இதில் மாநில அரசின் நிதி பங்களிப்பு என்பது மிக மிகக் குறைவு தான். எனவே யு.ஜி.சி மற்றும் கவர்னர் அனுமதி இன்றி பல்கலைக்கழக துணைவேந்தர்களை நியமிக்க சட்டத்தில் வழியில்லை. இதை தெளிவாக தெரிந்து கொண்டே தி.மு.க காய் நகர்த்துகிறது.

சமூக நீதி பேசும் இவர்கள், பட்டியல் இன சமூகத்திற்கு தி.மு.க போட்ட பிச்சை நீதிபதி பதவி என்று கூட பேசினார்கள்.

எங்கெல்லாம் வாய்ப்பு கிடைக்கிறதோ அங்கெல்லாம் ஜாதி ரீதியாக, மொழி ரீதியாக பிரிவினையை உண்டாக்கி தரம் தாழ்ந்த கருத்துக்களை தி.மு.க வெளிப்படுத்தும்.


இதே தீர்ப்பை பிராமணர் அல்லாத
பிற நீதிபதிகள் வழங்கி இருந்தால்
திமுக அவர்களின் ஜாதியைச் சொல்லி
பேசி இருக்குமா?

ஆபாசப் பேச்சும், தனிநபரை மோசமாக தாக்கிப் பேசுவதும் திமுகவின் இரட்டை குழல் துப்பாக்கிகள்.

அங்கே தொட்டு இங்கே தொட்டு இன்று நீதிபதிகளையே கொச்சைப்படுத்தி பேசும் செயலை திமுக உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும். நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சிக்கலாமே தவிர நீதிபதிகளை தனிப்பட்ட முறையில் தாக்குவது என்பது தீர்ப்புக்கு உள்நோக்கம் கற்பிப்பது போன்றது.

உயர் நீதிமன்ற நீதிபதிகளின் படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு ஜாதி பாகுபாடு கற்பித்து கருத்து தெரிவித்த தி.மு.கவினரை இந்துமுன்னணி வன்மையாக கண்டிக்கிறது.





# திட்டமதிப்பு பலகை எங்கே?

வடிகால் பணிகள் நடை பெரும் திட்டமதிப்பு அறிவுப்பு பலகை வைக்க பொதுமக்கள் கோரிக்கை : கோவை மாவட்டம் துடியலூர், வடமதுரை பகுதிகளுக்கு உட்பட்ட மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலைகள் இரண்டு மாதங்களாக நடைபெற்று வரும் வடிகால் பணிகள் இன்று வடமதுரை பகுதியில் மழையில் கான்க்ரீட் கலவை கொட்டப்பட்டு வடிகால் பணிகள் நடை பெறுகிறது. இதுபோன்ற மழையில் கான்க்ரீட் கலவை கொட்டப்படுவதால் வடிகால் தரமானதாக அமையுமா என்று தெரியவில்லை சரியான விதிமுறைகள் பின்பற்றியும் மேற்கண்ட வடிகால் பணிகள் நடைபெறும் இடங்களில் தகுந்த பாதுகாப்பு முன்னேற்ப்பாடுகள் செய்யும்படி பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர். மேலும் திட்டமதிப்பு பணிகள் குறித்த முழு விபரங்கள் பொதுமக்கள் அறியும் வகையில் அறிவிப்பு பலகை வைக்கப்பட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.

**மாணிக்கம் தாலுகா செய்தியாளர்**
**கோவை.**



# அனுமதி இன்றி பட்டாசு, பேனர் வைத்தால் கடும் நடவடிக்கை..

உசிலம்பட்டி பகுதியில் பட்டாசு வெடித்தால், அனுமதியின்றி ப்ளக்ஸ் வைத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மண்டப உரிமையாளர்கள், ப்ளக்ஸ் கட்டுவோர்களுடனான ஆலோசனை கூட்டத்தில் டிஎஸ்பி சந்திரசேகரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.,

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் பட்டாசு வெடிப்பதாலும், அனுமதியின்றி வைக்கப்படும் ப்ளக்ஸ் பேனர்கள், கூம்பு வடிவ ஒலிப்பெருக்கி உள்ளிட்ட வற்றால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைந்து வந்தனர்.,

வெடி வெடிக்க தடை உத்தரவு இருந்தும் தொடரும் இந்த பாதிப்புகளாலும், அடுத்தடுத்து எழுந்த தொடர் புகார்களின் அடிப்படையில் இன்று உசிலம்பட்டி தனியார் மண்டபத்தில், உசிலம்பட்டி சரக காவல்துறை சார்பில், வருவாய்த்துறை, நகராட்சி, ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் தலைமையில் உசிலம்பட்டி பகுதியில் உள்ள மண்டப உரிமையாளர்கள், ப்ளக்ஸ் பிரிண்டிங் கடை உரிமையாளர்கள், ப்ளக்ஸ் கட்டுவோர்கள், ரேடியோ மைக்செட் உரிமையாளர்களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.,


இதில் பேசிய உசிலம்பட்டி டிஎஸ்பி சந்திரசேகரன், உசிலம்பட்டி பகுதியில் பட்டாசு வெடிக்க தடை



இருந்தும் கட்டுப்படுத்த முடியவில்லை எனவும், வேறு எந்த ஊரிலும் இது போன்று இடையூறு செய்வதில்லை பாதிக்கப்படுவது உங்கள் உறவினர்கள் தான் எனவும், போக்குவரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தி பட்டாசு வெடித்தாலோ, அனுமதியின்றி ப்ளக்ஸ் பேனர் வைத்தாலோ, பொது இடங்களில் ஒலிபெருக்கி அமைத்தாலோ கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும், மண்டப உரிமையாளர்கள் இல்ல விழாவிற்காக பதிவு செய்ய வரும் போதே பட்டாசு வெடிக்க , ப்ளக்ஸ் பேனர் வைக்க அனுமதி இல்லை என்ற விதிமுறைகளை தெரிவிக்க வேண்டும் எனவும், மீறுவோர் மீது எந்த பாரபட்சமும் காட்டாமல் காவல்துறை வழக்கு பதிவு செய்து கடும் நடவடிக்கை எடுக்கும் என எச்சரிக்கை விடுத்து பேசினார்.,

**வீரசேகர் உசிலம்பட்டி**

# அருந்தமிழ் புலவர்களும் அவர்தம் இலக்கியங்களும்



# 2 சிவப்பிரகாசர்..

## பாவலர் மார்க்சு இளவேனில்(எ) அ.நா.பேரறிவன்.

நன்னெறி என்னும் அறநூல் ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த துறை மங்களம் சிவப்பிரகாச சுவாமிகள் என்னும் புலவரால் இயற்றப்பட்டது.

சிவப்பிரகாச சுவாமிகள் பொம்மபுரத்தில் வாழ்ந்து வந்த காலத்தில் ஒரு நாள் தனிமையாக கடற்கரையை அடைந்து. அங்குள்ள நல்ல மணற்பரப்பிலே நன்னெறி வெண்பா நாற்பதையும் எழுதி விட்டு வந்து அதனை ஏட்டில் எழுதி வரும்படி தம்பியிடம் கட்டளை யிட்டார். அவரும் அவ்வாறே எழுதி வந்தார் என்று கூறுவார் இந்நூலில் ஒவ்வொரு பாவும் மக்களுக்கு இன்றி யமையாத அறங்களை அழகிய உவமைகளுடன் இயற்றப்பட்டுள்ளது. உவமைகள் மாந்த குலதாரால் நன்கு அறியப்பட்டவையாக இருந்தன. பாடலை படிப்பவர்களுக்கு வியப்பும் மகிழ்ச்சியும் விளைவிப்பனதாகும். மக்களின் உடல் உறுப்புகளாகிய கண் முதலியனவற்றின் இயல்புகளை ஒன்பது பாடல்களிலும் ஞாயிறு, திங்கள், கடல் ,காற்று உள்ளிட்ட இயற்கையையும் நெல் ,வாழை, பசு முதலிய பயிர் நன்கறிந்த பொருள்களையும் உவமையாக வைத்திருப்பது சிறுவர், இளைஞர்கள் படிப்பதற்கும் கல்வி கற்றுத்தரும் ஆசிரியர்களுக்கும் விளங்கும் வகையில் எழுதி உள்ளமை, திறன்மிக்க புலவர் நம் சிவப்பிரகாசர் ஆவார் என்பதை அறிய முடிகிறது.

மேலும் இந்நன்னெறி பாடல்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தன்மை உடையன. அவர் பாடலின் சுவையில் ஆர்வமில்லாத உள்ளம் உடையவர் "அவிழ்ச்சுவையன்றி" தமிழ் சுவை அறியாதவர் இருப்பார்.

அவர் இயற்றிய பிற நூல்கள்: சிவப்பிரகாச சுவாமிகள் இட்டலிங்கப் பெருமான் மீதும் சிவஞானபாலைய தேசிகர் மீதும் பாடி உள்ள பிரபந்தங்களும் சோணசைமாலை, நால்வர் நான் மணிமாலை, திரு செந்திலந்தாதி, பழமலையந்தாதி,பிசஷாடண நவமணிமாலை, பெரியநாயகி யம்மை விருத்தம், திருவெங்கைக் கோவை, திருவெங்கைக் கலப்பகம், திருவெங்கை உலா, வேதாந்த சூடாமணி, சித்தாந்த சிகாமணி, பிரபு லிங்க லீலை, திருக்கூவப்புராணம்,சீகாளத்திப் புராணம்,நக்கீரச் சருக்கம் என்பனவும் தருக்க பரிபாஷை முதலியனவும் ஆகும். சீகாளத்திப் புராணத்தின் முற்பகுதி கருணைப் பிரகாசராலும், பிற்பகுதி வேலையராலும் பாடப்பெற்றன.

இனி சிவப்பிரகாசரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை பார்ப்போம், சிவப்பிரகாசரின் தந்தையார் தொண்டை மண்டலத்தில் காஞ்சிபுரம் வேளாளர் குல குருக்களாக இருந்த குமாரசாமி தேசிகர் என்பவர் ஆவார். இவர் சிவலிங்க தாரணஞ் செய்து கொண்டு வீர சைவர் (இலிங்காயத) சமயத்தைச் சார்ந்தவராக இருந்தார். சிவபிரகாசருக்கு கருணை பிரகாசர் வேலையர் என இரு தம்பிகளும் ஞானாம்பிகை என ஒரு தங்கையும் இருந்தனர்.

ஞானாம்பிகை என்பவர் திருப்போரூரில் வாழ்ந்த சாந்தலிங்க சாமிகள் என்னும் பெரியாருக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டார். இந்த சாந்தலிங்க சாமிகள் வைராக்கிய சதகம் உள்ளிட்ட பிற நூல்களையும் இயற்றியுள்ளார். சிவப்பிரகாசர் மனம் செய்து கொள்ளாமல் துறவு பூண்டிருந்தார். சிவபிரகாசர் இளம் அகவையிலேயே இருந்தபொழுது தமிழ் கல்வியில் சிறந்து விளங்கியதுடன் தமிழ் செய்யுள் இயற்றும் புலமையும் பெற்றி ருந்தார்.

இவர் இளைஞராக இருந்த பொழுது திருவண்ணாமலை யில் வாழ்ந்து வந்தார். அப்பொழுது ஒரு நாள் "சோணசைல மாலை" என்னும் பெரிய நூறு செய்யுள் பிரபந்தம் பாடி அண்ணாமலையாரை துதித்து வந்தார். அவர் தமிழ் இலக்கணம் பாடம் கற்றுக்கொண்ட வரலாற்றை

பின்வரும் செய்திகளால் அறியலாம்.

" பாண்டிய நாட்டிலே தாமிரவ ரணிக் கரையில் உள்ள 'சிந்துப் பூந்துறை'யில் தருமபுர ஆதினத்து வெள்ளியம்பல வாணத்தம்பிரான் இலக்கண இலக்கியங்களில் மிகவும் வல்லுனராக இருக்கிறார் என்பதை கேள்விப்பட்டு சிவப்பிரகாசர் அவ்விடத்தை சென்று அடைந்தார். தம்பிரான் சாமிகளை கண்டு இலக்கணம் கற்க வேண்டி வந்ததை தெரிவித்தார்.

சுவாமிகள் இவரது இலக்கிய பயிற்சியை அறியும் பொருட்டு 'கு'என்ற எழுத்து முதலிலும் இறுதியிலும் அமையும் ஊருடையான் என்பது இடையில் பொருந்தவும் ஒரு வெண்பாப் பாடும் படி கேட்டுக் கொண்டார்.

அப்பொழுதே பின்வருமாறு எழுதினார் "குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழன்

முடக்கோடு முன்னமணி வாற்கு விடக் கோடு

தேருடையான் றெவ்வுக்குத் தில்லை தேரன் மேற்கொள்ளலூருடையா னென்னு முலகு இப்பாடலில்,

'வடக்கொடு தேருடையான்

என்று வைத்து எழுதியமை தம்பிரானடிகள் வியந்து பாராட்டினார்

வேலை கருனைப்பிரகாசர் என்னும் ஆகிய இருவருக்கும் சில நாட்களில் ஐந்திலக்கணத்தையும்

பாடம் சொல்லிச் கொடுத்தார்

அதையடுத்து சிவப்பிரகாசர் தம் கொண்டு வந்த 300 பொற்காசுகளை ஆசிரியருக்கு காணிக்கையாகக் கொடுத்தார்

இதனைக் கண்ட ஆசிரியார் "எமக்கு வேண்டு வகுதில்லை புலவர்களை இகழும் புன் எம்பயுடையவராகத் திகழும் திருச்செந்தூரில் தமிழ்ப்புலவர் ஒருவரின் செருக்கை அடக்கி அவர் நம்மை வந்து பணியும்படி செய்வதே எமக்கான காணிக்கையாகும் என்றார்.

இதற்கு சிவப்பிரகாசரும் உடன்பட்டார் அவ்வாறே திருச்செந்தூர் சென்று முருகப்பெருமானை வணங்கம் கோயிலைச் சுற்றிவரும் பொழுது புன்புலவர் இவரை இகழ்த்தலைப்பட்டார். இவரை புதிய முறையில் வெற்றிப் பெறுவோ என துணிந்து நாம் இருவரும் நீரோடாக யாமகம் பாடுவோம் முதலில் பாடி முடித்தவருக் கோரற்றவர் அடிமையாவோம் என்று கூறினார் அதற்கு சாமிகள் இசைந்து உடனே முருகப் பெருமான் மீது நீரோடாக யமக கட்டளைக் கலித்துறை பாடி முடித்தனர்.

(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்)




# கும்பாபிஷேகம் நடத்த பொதுமக்கள் கோரிக்கை

**புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி சிவன் கோயில் திருப்பணிக்கான வேலைகள் விரைவாக முடித்து கும்பாபிஷேகம் நடத்தவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

பொன்னமராவதி ஆவுடையநாயகி சமேத சோழீஸ்வரர் கோயில் நகரின் மையப்பகுதியில் காணப்படுகிறது. காவல்நிலையம், பத்திரப் பதிவு அலுவலகம், தபால் நிலையம், அமரகண்டான் ஊரணி, பட்டமரத்தான் கோயில், பேரூராட்சி அலுவலகம்,தாலுகா கோர்ட்,நூலகம் என நகரின் அனைத்து பொது அலுவலகங்களும் இந்த கோயிலின் அருகில் உள்ளன. இந்த கோயிலில் தேய்பிறை அஷ்டமி, பிரதோசம், கார்த்திகை, சோமவாரம், ஆருத்ராதரிசனம் உள்ளிட்ட பல்வேறு விழாக்கள் நடைபெறுகின்றன். மேலும், பல்வேறு சிறப்பு வாய்ந்த சுவாமிகள் உள்ள, இந்த கோயில் சிறப்பு வாய்ந்ததாக உள் ளது. புதுக்கோட்டை, திருச்சி, சிவகங்கை உள்ளிட்ட தமிழகத்தின் பல் வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பக்தர்கள் இந்த கோயிலில் வழிபாடு செய்து வருகின்றனர். பழங்கால பாரம்பரிய மிக்க இந்த கோயில் வளாகதை சுற்றி மழை நீர் தேங்கி நிற்கின்றது. கோயில் சுவர், தளம் உள்ளிட்டவை பழு தடைந்துள்ளது. எனவே, இந்த கோயில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடத்தவேண்டும் என பக்தர்கள் பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். இதனையடுத்து, இந்நிலையில், இந்திய தொல் பொருள் துறை மூலம் திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டு நடை பெற தொடங்கியது. இந்த கோயில் திருப்பணிகள் கடந்த இரண்டு ஆண்டுக்கு முன்னர் தொடங் கிய நிலையில் கோயில் சுற்றுப்பகுதியில் பேவர் பிளாக் கல் பதிக்கும் பணி முடிந்துள்ளது. மழைநீர் கோயிலுக்குள் இருந்து தண்ணீரை வெளியேற்ற வடிகால் அமைக்கும் பணி நடந்துள்ளது. இந்நிலையில், கோயில் நுழைவாயில் பகுதியில் பழங்காலத்தில் இருந்தது போல படிகள் அமைக் கப்பட்டுள்ளது. குண்டுக்கல் கட்டப்பட்டுள்ளது. மற்ற பணிகள் மெதுவாக நடைபெற்றுவந்த நிலையில் இப்போது எந்த பணிகளும் நடைபெறவில்லை. மிகவும் பழைமை வாய்ந்த இந்த கோயில் கும்பாபிஷேக

பணிகளை விரைவாக முடித்து கும்பாபிஷேகம் செய்யவேண்டும் என பக்தர்கள் மற்றும் பொது மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

**செய்தி : M. மூர்த்தி, மாவட்ட தலைமை செய்தியாளர், புதுக்கோட்டை**



# ஆள்பற்றாக் குறையால் விவசாயம் இயந்திர மயம்



மணப்பாறை மாடு கட்டி மாயவரம் ஏறு பூட்டி வயக்காட்ட உழுது போடு சின்ன கண்ணு.

பசுந் தழையை போட்டு பாடுபடு செல்லக்கண்ணு.

ஆத்தூரு கிச்சடி சம்பா பார்த்து வாங்கி விதை விதைச்சி நாத்து பறிச்சு நட்போடு சின்ன கண்ணு.

தண்ணிய ஏற்றம் புடிச்சி எறச்சி போடு செல்லக்கண்ணு.

கதிர நல்லா விளையவச்சி மதுர ஜில்லா ஆள வச்சி அறுத்து போடு களத்து மேட்டுல சின்ன கண்ணு.

நல்லா அடிச்சு குலுக்கி அளந்து போடு செல்லக்கண்ணு.

பொதிய ஏத்தி வண்டியில பொள்ளாச்சி சந்தையில விருதுநகர் வியாபாரிக்கு சின்ன கண்ணு நீயும் வித்து போட்டு வளர்த்த எண்ணு செல்லக்கண்ணு.

சேத்த பணத்தை சிக்கனமா செலவு பண்ண பக்குவமா அம்மா கையில கொடுத்து போடு சின்ன கண்ணு அவரு ஆற நூறாக்குவாங்க செல்லக்கண்ணு.

**"ஏறு புடிச்ச சோறு கொடுக்கும் பூமி இது" "சோழ நாடு சோறுடைத்து""தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம்"**

என்றெல்லாம் வர்ணிக்கப்பட்ட தஞ்சாவூர் டெல்டாவில் 100 நாள் வேலை திட்டம் வேலையே செய்யாமல் சம்பளம் வாங்குவதற்காக விவசாய தொழிலாளர்கள் முகாமிட்டதால் விவசாயத் தொழிலுக்கு பெரிய அளவில் ஆள் பற்றாக்குறை ஏற்பட்டது.

இளைய தலைமுறை விவசாய தொழில் செய்வதை பலர் கேவலமாக நினைத்துக் கொண்டு திருப்பூர் சென்னை கோயமுத்தூர் போன்ற நகரங்களுக்கு வேறு வேலைகளுக்கு சென்று விட்டார்கள்.

அடிவயிற்றில் எரியும் அக்கினி "தீ" பசி உலகத்தில் உள்ள அத்தனை ஜீவராசிகளுக்கும் பசி பொதுவானது அந்த பசிப்பிணி போக்கும் உன்னதமான தொழிலை செய்பவர்கள் விவசாயிகள்.

காலையில எந்திரிச்சி கலப்ப மாட்ட ஓட்டிக்கிட்டு காடு வயல் உழுவப்போனது அப்போ.

காலையில் எந்திரிச்சி காப்பி தண்ணி குடிச்சிட்டு கட்சி பேச்சு பேசுறது இப்போ.

என்கிற நாட்டுப்புறப் பாடல் நினைவுக்கு வருகிறது.

தஞ்சாவூர் டெல்டாவில் பெருமளவில் விவசாய தொழிலையே நம்பி இருக்கிற விவசாயிகள் ஆள்பற்றாக்குறை வந்தாலும் விவசாய தொழிலை நிறுத்தவில்லை.

லாபமே இல்லை என்றாலும் வேறு தொழில் தெரியாத காரணத்தால் இன்னமும் விவசாயத் தொழிலையே நம்பி இருக்கிறார்கள்.

சும்மா கிடந்த நிலத்தை கொத்தி சோம்பல் இல்லாம உழைத்துவிட்டு அந்த காலத்திலே கையும் காலும் தானே மிச்சம் என்று பாடியது உண்மைதான்.

காவிரி நதிநீர் பிரச்சனை தொடர்ந்தாலும் இயற்கையின் கருணையால் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

சில விவசாயிகள் ஆழ்குழாய் கிணறு மூலம் சாகுபடி செய்கிறார்கள்.

அந்தக் காலங்களில் விவசாயிகளே விதை தயார் செய்து நிலையில். ஒவ்வொரு சாகுபடிக்கும் அரசு அல்லது தனியார் கடைகளில் விதைகளை வாங்க வேண்டி உள்ளது.

விதைச் சட்டம் 1966/19(கி) ன் படி தரமான விதைகளை வாங்க வேண்டும். விதைச் சான்று ஆய்வாளர்கள் அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும்.

தற்போதும் நிறைய இடங்களில் தரமற்ற விதைகள் வழங்கப்படுகிறது.

இயற்கை உரம் மாட்டு சானம், ஆட்டு உரம் போன்றவைகளை கைவிட்டு பசுமை புரட்சி என்று அரசாங்கமே ரசாயன உரம் மற்றும் பூச்சி மருந்துகளை பரிந்துரை செய்து விவசாயிகள் அனைவரும் பயன்படுத்தி வருகிறார்கள்.

இதன் விளைவால் குழந்தைகள் சாப்பிடும் தாய்ப்பால் கூட விஷமாகி விட்டது.

இந்நிலையில் விவசாய தொழிலை பாதுகாக்க ஆள் பற்றாக்குறை ஏற்பட்டதால் முதலில் ஏர் உழவு செய்வது போய் டிராக்டர் மூலம் உழவு செய்யப்படுகிறது.

நீர் இறைப்புக்கு மின் மோட்டார்.

டிராக்டர் மூலம் பின்பக்கம் வரப்பு வெட்டும் இயந்திரம் மூலம் வரப்பு வெட்டுவது.

கரும்பு மற்றும் வாழைக்கு டிராக்டர் மூலம் பார்பிடிப்பது.

நேரடி விதைப்புக்கு ட்ரோன் மூலம் விதை விதைப்பது.

இயந்திர நடவு.

களை எடுக்க கோனோ வீடர்.

பூச்சி மருந்து உரம் தெளிக்க ட்ரோன்.

இயந்திரம் மூலம் அறுவடை.

கரும்பு வெட்டும் இயந்திரம்.

சோளம், கடலைஉடைக்க மிஷின்.

தேங்காய் பறிக்க கிரேன்.

நெல் உலர்த்த மிஷின்.

நெல் தூற்ற மிஷின்.

சாக்குத் தைக்க மிஷின்.

வைக்கோல் கட்ட மிஷின்.

விவசாயத்தில் எல்லாம் எந்திர மயம்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் பஞ்ச நதி கோட்டை என்னும் கிராமத்தில் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு அரசு புதிய நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைத்துள்ளார்கள்.

இதிலும் நெல்லை கொட்டினால் அதுவாகவே உலர வைத்து தூற்றி சுத்தம் செய்து சாக்கில் கொட்டி அதுவாக தைத்து கன்வேயர் பெல்ட் மூலம் நகர்ந்து லாரி அல்லது டிராக்டரில் ஏற்றும் நவீன கொள்முதல் நிலையம் செயல்பட்டு வருகிறது.

ஒரு மணி நேரத்தில் 10 கொள்முதல் நிலையத்தில் பணியாளர்கள் செய்யும் வேலையை இந்த கொள்முதல் நிலையம் செய்கிறது. மூன்று நபர்கள் மட்டுமே இந்த கொள்முதல் நிலையத்தில் பணியாற்றுவார்கள்.

டெல்டாவில் அனைத்து வேலைகளையும் இயந்திரங்களை வைத்துக்கொண்டு விவசாயத் தொழிலை செய்து வந்தாலும் இன்னும் சிலர் இயற்கை விவசாயத்தை மீட்டெடுப்பதற்காக மூன்று ஆண்டுகள் வயலில் உரம் பூச்சி மருந்து பயன்படுத்தாமல் குறைந்த மகசூல் சாகுபடி செய்து அதன் பின் பாரம்பரிய நெல் ரகங்களான கருப்பு கவனி, மாப்பிள்ளை சம்பா, தூயமல்லி,ரத்தசாலி,பூங்கார் போன்ற விதைகளை பயிரிட்டு அய்யா நம்மாழ்வார் மற்றும் நெல் ஜெயராமன் மீட்டெடுத்த மருத்துவ குணங்கள் கொண்ட பாரம்பரிய நெல் ரகங்கள் 160 வகைகளில் 10 ரகங்களை பயிரிட்டு அதை மதிப்பு கூட்டு பொருளாக மாற்றி அயல்நாடுகளுக்கும் விற்று வருகிறார்கள்.டெல்டா மாவட்டத்தில் ஒரே நேரத்தில் இயந்திர விவசாயமும் செய்கிறார்கள். இயற்கை விவசாயமும் செய்கிறார்கள்.

இயந்திர விவசாயம் செய்பவர்களுக்கு கூட இயந்திரங்கள் வாங்குவதற்கு கடன் உதவி மானியம் போன்றவை கிடைக்கிறது.

இயற்கை விவசாயம் செய்ய போராடும் விவசாயிகளுக்கு தமிழ்நாடு அரசோ இந்திய அரசோ எந்த உதவியும் செய்வது கிடையாது.

ஒட்டுமொத்த விவசாயிகளும் ஆள்பற்றாக்குறையால் இயந்திர விவசாயம் செய்து வரும் நிலையில் 10% விவசாயிகள் இயற்கை விவசாயம் செய்ய போராடுகிறார்கள்.

எனவே மத்திய மாநில அரசு இயற்கை விவசாயிகளுக்கும் ஆதரவு தந்து இயற்கை விவசாயத்தை மீட்க வேண்டும் சமூக ஆர்வலர்களும் விவசாய சங்க தலைவர்களும் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகிறார்கள்.

தஞ்சாவூர் காவிரி டெல்டா விவசாயிகள் சங்கம் சார்பில் தஞ்சாவூர் டெல்டா மாவட்டங்களில் இயற்கை விவசாயிகளுக்கு ஊக்கம் தந்து ஆலோசனை நல்கி விதைகளை வழங்கி விளைவித்த நெல் மற்றும் அரிசி விற்பனைக்கு உதவிகளும் செய்து வருகிறோம்.

**ஏகேஆர் ரவிச்சந்தர்**
**தலைவர்**
**காவிரி டெல்டா விவசாயிகள் சங்கம்**
**தஞ்சாவூர்**



# கோடை விழா.. ஸ்தம்பித்த ஏற்காடு..

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் 48 வது கோடை விழா மற்றும் மலர்க்கண்காட்சியை (மே 23) மாலை 05.00 மணியளவில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் ராஜேந்திரன், வனம் மற்றும் கதர்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன், சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் ஆகியோர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர்.

அதைத் தொடர்ந்து, அண்ணா பூங்காவில் உள்ள விதவிதமான வண்ண மலர்கள் மற்றும் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த வனவிலங்குகள், கார்ட்டூன்களை பார்த்தனர். நிகழ்ச்சியில், சேலம் மேற்கு தொகுதி எம்.எல்.ஏ. அருள், மேட்டூர் தொகுதி எம்.எல்.ஏ. சதாசிவம், சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், மாவட்ட ஆட்சியர் டாக்டர்.பிருந்தாதேவி, தோட்டக்கலைத்துறை அதிகாரிகள், வேளாண்துறை அதிகாரிகள் மற்றும் பல்வேறு துறையைச் சேர்ந்த அரசு உயரதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வேளாண்மைத்துறை, வனத்துறை, சுற்றுலாத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, பட்டு வளர்ச்சித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளையும் திறந்து வைத்த அமைச்சர்கள், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

தொடர்ந்து, ஏற்காடு படகு இல்லம் உள்ளிட்ட இடங்களுக்கு சென்ற அமைச்சர்கள் நேரில் பார்வையிட்டனர். இதனிடையே, சுற்றுலாப் பயணிகள் ஏற்காட்டில் குவிந்ததால், ஏற்காடு மற்றும் ஏற்காடு மலைப்பாதையில் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

**முகமது**
**மாவட்ட செய்தியாளர் சேலம்**

தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் சார்பில் திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் உள்ள சிம்ம தீர்த்தம் எதிரே பணிபுரியும் மகளிர்களுக்காக ரூ.10.15 கோடியில் 3 தளங்கள் 132 படுக்கை வசதி கொண்ட தோழி விடுதி கட்டப்பட்டது

இதன் திறப்பு விழா மே 21 அன்று நடைபெற்றது. சென்னை, தலைமைச் செயலகத்தில் இருந்தபடியே காணொலி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார்.

அதேவேளையில், தோழி விடுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கலந்து கொண்டு தோழி விடுதியை குத்து விளக்கேற்றி பயன்பாட்டுக்கு தொடங்கிவைத்தார்.

அப்போது அவர் பேசுகையில், 3 தளங்கள் கொண்ட இந்த விடுதியில் 132 படுக்கை வசதி உள்ளது. இந்த விடுதியில் பயோ மெட்ரிக் முறையில் உள் நுழைவு வசதி, வைபை இணையதள வசதி, கண்காணிப்பு கேமரா வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், ஆரோக்கியமான உணவு, தொலைக்காட்சி வசதி, சுடுநீர் வசதி, சலவை இயந்திரம், இஸ்திரி வசதி, வாகன நிறுத்துமிடம் போன்ற வசதிகள் உள்ளன.

இந்த விடுதியில் 15 நாள்கள் வரை குறுகிய காலமாகவும் தங்கிக் கொள்ளலாம். விடுதிக் கட்டணமாக ஒரு நாள் வாடகையாக ரூ.800, மாதக் கட்டணமாக ரூ.3,800 நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. விடுதியில் தங்க இணைய தளத்தில் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

கூடுதல் விவரங்களுக்கு 9499988009 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் க. தர்ப்பகராஜ், சி.என்.அண்ணாதுரை எம்.பி., மகளிர்திட்ட இயக்குநர் சரண்யா தேவி, மாவட்ட சமூக நல அலுவலர் கோமதி மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

**செய்தி. ச.அச்சுதன் திருவண்ணாமலை மாவட்ட தலைமை நிருபர்...**



# பணிபுரியும் பெண்களுக்கு வரமாய் வந்த தோழி விடுதி..

# இந்திய நூலக இயக்க முன்னோடிகள்

## பத்மஸ்ரீ எஸ். பசீருதீன் (1902–1984)



முனைவர். இரா.கோதண்டராமன்
M.A.,M.L.I.S.,M.Phil., Ph.D.,
கல்லூரி நூலகர் (இணைப் பேராசிரியர்)
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி),
நந்தனம், சென்னை 600035.
கைபேசி : 8667376522



பத்மஸ்ரீ எஸ். பசீருதீன் ஒரிசா மாநிலம் கட்டாக்கில் 1902 ஆம் ஆண்டில் பிறந்தவர். 1922 ஆம் ஆண்டு இவர் லாகூர் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் உதவி நூலகராகப் பணியமர்த்தப்பட்டார். அந்தக் காலத்தில் நூலகத்தை நடத்துகிற, பராமரிக்கிற முக்கியமானப் பொறுப்பு உதவி நூலகரைச் சார்ந்ததாகவே இருந்தது. பசீருதீன் நூலக வளர்ச்சியிலும், நூலகத்தைப் பெரிய அளவில் விஸ்தரிப்பிலும் கவனம் செலுத்தினார். இதற்கிடையில், இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் தேர்வு பெற்றார். நூலக அறிவியல் படிப்பை 1932 ஆம் ஆண்டில் லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியில் படித்தார். வெளிநாட்டுப் பயணத்தைப் பயனுள்ளதாக மாற்றிட லண்டனில் படிக்கும் காலங்களில், அங்கிருந்த நூலகங்களுக்குச் சென்று பல்வேறு விதமான நூலக அமைப்பு நடைமுறைகளைக் கற்றார். மேலும் அங்குப் பணியாற்றிய நூலகர்களிடம் நூலக நடைமுறைகள் குறித்து விவாதித்து தனது அறிவை மேம்படுத்திக் கொண்டார்.

லண்டன் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு, தாயகம் திரும்பிய பசீருதீன் தான் பணியாற்றி வரும் நூலகத்தை நவீன முறையில் மாற்றி அமைக்கவும், பல்வேறு செயல்பாடுகளை மேற்கொண்டார். அப்போது நூலகத்திற்கென்று விசாலமான ஓர் அறையே இருந்தது. பெருகி வரும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் புத்தகங்கள் எண்ணிக்கையால் விரிவுப்படுத்த முடிவு செய்யப்பட்டது. பொறியாளர்கள், கட்டட வல்லுநர்களிடம் மேற்கொண்ட விவாதங்கள், ஆலோசனைகளுக்குப் பிறகு முடிவில், ஆந்திராவைச் சேர்ந்த புகழ் பெற்ற கட்டடக் கலை நிபுணர் பயாஸ் அலிகான் மூலம் புதிய நூலகக் கட்டடத்திற்கான வரைபடத்தை பசீருதீன் பெற்றார். 14 லட்ச ரூபாய் மதிப்பீட்டிலான நூலகக் கட்டடத்திற்கு 1956 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் தேதி இந்தியக் குடியரசின் முதல் தலைமை அமைச்சர் பண்டித ஜவஉறர்லால் நேரு அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்றது. நான்காண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டு, 1960 ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் நாள் இந்தியக் குடியரசின் முதல் தலைமை அமைச்சர் பண்டித ஜவஉறர்லால் நேரு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நூலகத்திற்கு இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர் மௌலானா அபுல்கலாம் ஆசாத் பெயரே நூலகத்திற்குச் சூட்டப்பெற்று 'மௌலானா ஆசாத்" நூலகம் என்று அழைக்கப்படலாயிற்று. இந்த நூலகக்கட்டடம் ஏழு மாடிகள் கொண்ட கம்பீரமாக, பல்கலைக்கழகத்தின் நடுவில் முக்கிய இடத்தில் சுற்றிலும் பசும் புல்தரை மரங்களுடன், மனமும், நினைவும் ஒன்றிப் படிக்கக்கூடிய இணக்கமான சூழ்நிலையில் அமைந்திருந்தது.

இதற்குப் பிறகு 1958 ஆம் ஆண்டில் நூலக இயல் இளங்கலை பட்டப்படிப்பை பல்கலைக்கழத்தில் இவரது முயற்சியால் கொண்டு வரப்பட்டது. இதற்குப் பிறகு இங்கு பட்டப்படிப்பை முடித்தவர்கள் பலர் வெளிநாடுகளில் பல பெரிய நூலகங்களில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றனர். பல்கலைக்கழகப் பணியில் பெண்களுக்கு வேலை வாய்ப்புக்கு வழியமைத்த முதல் மனிதர் இவர்தான். பேராசிரியர் பசீருதீன்,நூலகத் தந்தை டாக்டர் எஸ்.ஆர். ரங்கநாதன் நடத்தி வந்த நூலகச் சங்கத்தில் துணைத் தலைவராகப் பணியாற்றி உள்ளார். இவரது அளப்பரிய நூலகச் சேவைகளைக் கௌரவிக்கும் வகையில் இவருக்கு 1976 ஆம் ஆண்டு இந்திய அரசு இவருக்கு 'பத்மஸ்ரீ" விருதை வழங்கியது. 1984 ஆம் ஆண்டு அக்டோபர் 22 ஆம் நாள், இவர் இயற்கையெய்தினார். இவரது மரணம் நூலகத் துறைக்கு பேரிழப்பு என்றுக் கூறினால் அது மிகையல்ல.

**(தகவல் ஆதாரம் : இந்திய நூலக இயக்க முன்னோடிகள்)**

# மகன் தந்தைக் காற்றும் உதவி

# இவன் தந்தை என்னோற்றான்

# கொள் எனும் சொல்.



அய்யன் வள்ளுவனின் வாக்கிற்கு இணங்க தந்தையைப் போலவே பொதுவாழ்வில் தூய்மை அரசியலில் நேர்மை என அரசியலின் புது இலக்கணமாக திகழும் துரை வைகோ இன்றைய இளைஞர்களுக்கு அரசியலில் ஒரு நம்பிக்கை நட்சத்திரம் என்றால் அது மிகையல்ல, எத்தனையோ அரசியல்வாதிகளை வாழ்வில் கடந்து வந்திருப்போம் ஒவ்வொரு அரசியல்வாதிக்கும் ஒவ்வொரு விதமான குணம் நிறம் மனம் ஆனால் மக்களின் மனங்களை அறிந்து மக்களுக்காக செய்யும் பணியே அரசியல் என புரிந்து நிறம் மனம் திடம் என அனைத்திலும் முன்னோடியாக பரிணமித்து வருகின்றார் துரை வைகோ.

ஒரு மிகச்சிறந்த தொழிலதிபராக உயர்ந்து தன் தொழிலில் கவனத்தை செலுத்தி தன் தொழிலை உயர்த்திக் கொண்டிருந்த இவரை காலம் அரசியல் சுழலில் சிக்க வைத்தது. அதுவரை எந்தவிதமான அரசியலிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாத துரை வைகோ அவர்கள் தன் தந்தையின் கட்டளையை ஏற்று அரசியலில் களம் புகுந்தார்.

ஒரு தொழிலதிபராக சவால்களை சந்தித்த இவருக்கு அரசியலில் சந்திக்க நிறைய சவால்கள் காத்திருந்தன. வெளி எதிரிகள் மட்டுமில்லாமல் உறவாடி கெடுக்கும் எதிரிகளும் உடன் இருந்தனர். அனைவரையும் சமாளித்து அரசியலில் எதிர்நீச்சல் பழகுவது என்பது மிக மிக கடினமான ஒன்று . ஆனால் மீன் குஞ்சுக்கு நீண்ட கற்றுக் கொடுக்கத்தான் வேண்டுமா புலிக்குட்டிக்கு வேட்டையாட பயிற்சி தான் அவசியமா என்பது போல அரசியல் வாழ்க்கையில் அண்ணாவின் பொன்மொழிகளான கடமை கண்ணியம் கட்டுப்பாடு மூன்றையும் தன்னுடைய சுவாசமாக பாவித்து இன்றளவும் அரசியலில் புனிதராக மக்களின் மனங்களில் நல்லவராக வாழும் நம்முடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மதிமுக நிறுவனர் ஐயா வைகோ அவர்களின் மகன் ஆயிற்றே , அவரின் வேகத்தில் பாதி கூடவா இல்லாமல் இருக்கும் இந்த மகனுக்கு.

தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும் என்பார்கள் ஆனால் இங்கு தந்தை எட்டடி பாய்ந்தால் மகன் 16 அல்ல 32 அடி பாய்கின்றார் அசுரவேகம் எதிரிகளுக்கும் இவரை கண்டால் கிலி ஏற்படுகின்றது. உள்ளிருந்து குழி பறிப்பவர்களுக்கும் இவரைக் கண்டால் கிலி ஏற்படுகின்றது. அரசியலில் களமிறங்கிய பொழுது ஆரம்ப கட்டத்தில் சற்றே தடுமாறித்தான் போனார். ஆனால் மெல்ல மெல்ல அரசியலை உள்வாங்கி இப்பொழுது நடக்கும் அரசியலுக்கு எதிராக தூய்மையான ஒரு அரசியல் பணியை முன்னெடுக்க தொடங்கியுள்ளார் இந்த தூயவரின் மகன்.

2024 பாராளுமன்ற தேர்தலில் திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதியில் திமுக தலைமையிலான இந்தி கூட்டணியில் மதிமுக வேட்பாளராக களம் இறங்கிய துரை வைகோ தனக்கான பம்பரம் சின்னம் கிடைக்காமல் கடைசிவரை என்ன சின்னம் என்பதை தெரியாமல் சின்னத்திற்காக போராட வேண்டிய சூழல் உருவாகி இருக்கு கடைசியாக அவருக்கு தீப்பெட்டி சின்னம் வழங்கப்பட்டது அதுவரை மதிமுகவில் பம்பர சின்னத்தில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு இடையே முதன்முதலாக தீப்பெட்டி சின்னத்தில் களமிறங்கினார் துரை வைகோ தொடக்கத்தில் கூட்டணிக் கட்சியினர் இடமிருந்து எதிர்பார்த்த அளவிற்கு ஆதரவு கிடைக்காவிட்டாலும் மெல்ல மெல்ல தன்னுடைய நற்குணங்களால் அவர்களையும் தன் வசம் இருப்பார் செல்லும் இடங்கள் எல்லாம் ஒரு அரசியல்வாதியை போல பேசாமல் எளிய மனிதனாக மக்களின் தேவைகளை குறிப்பாக அந்தந்த பகுதி மக்களின் தேவைகளை ஆராய்ந்து நன்கு உணர்ந்து அவற்றை பற்றி பேசி மக்களின் பிரச்சினைகளை நிச்சயமாக பாராளுமன்றத்தில் பேசி தீர்வுகளை ஏற்படுத்தித் தருவேன் என்று மக்களிடம் உறுதி கூறினார் திமுக தேர்தல் யுக்திகளோடு துரை வைகோ அவர்களின் எளிமையான மென்மையான குணமும் மக்களிடையே அவர் மீது அளப்பரிய மரியாதையை ஏற்படுத்தியது அதன் காரணத்தினால் திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதியில் அளப்பரிய வெற்றியை பெற்று முதன் முதலாக நாடாளுமன்றத்தில் காலடி எடுத்து வைத்தார் தான் தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகள்

எதையும் இன்றுவரை துரை வைக்கோ மறக்கவில்லை என்பது அவரோடு நெருங்கி பேசும் பொழுது நன்றாக உணர முடிகின்றது இந்த ஒரு வருடத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியை சேர்ந்த

39 பாராளுமன்ற உறுப்பினர்களை விட துரை வைகோ தன்னுடைய தொகுதி மக்களுக்காக செய்த செயல்களும் வளர்ச்சி திட்டங்களும் சொல்லில் அடங்காதது இந்த ஒரு ஆண்டில் துரை வைகோ நிறைவேற்றி இருக்கும் சாதனை பணிகள் உங்கள் பார்வைக்காக வரிசை படுத்தப்படுகின்றது.

1. திருச்சி மும்பை ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான வழி போக்குவரத்து

2. திருச்சி சென்னை ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான வழி போக்குவரத்து

3. திருச்சி யாழ்ப்பாணம் இண்டிகோ விமான போக்குவரத்து

4. திருச்சி சத்திரத்தில் இருந்து பிஎச்இஎல் நுழைவு வாயில் வரை செல்லும் பேருந்து சேவை மீண்டும் தொடங்கப்பட்டது

5. திருச்சி பொன்மலை ஜி கார்னர் பகுதியில் சுரங்கப்பாதை அமைக்கும் தீவிர பணிக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

6. ரயில்வே சம்பந்தப்பட்ட பொது மக்களின் கோரிக்கைக்கு ஏற்று 25 கடிதங்களுக்கு மேலாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் ரயில்வே துறை அமைச்சர் அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது

7. திருச்சி விமான நிலையம் ஓடுதள பாதையில் விரிவாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

8. திருச்சி விமான நிலையத்தில் பணிகளை பயணிகளை இறக்கி விட ஆட்டோக்களுக்கு அனுமதி வாங்கித் தரப்பட்டது

9. திருச்சி விமான நிலையத்தில் உள்ள எக்ஸ்பிரஸ் கொரியர் சேவை தொடங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

10. திருச்சி கே கே நகரை சேர்ந்த திரு புருஷோத்தமன் அவர்களின் மகன் நிவாஸ் தான் சானியா நாட்டில் திடீர் மாறடைப்பு ஏற்பட்ட இறந்த நிலையில் அவரது உடல் மற்றும் குவைத் நாட்டில் இறந்த பழனிச்சாமி ஆகிய இருவரது உடல்களும் திருச்சிக்கு கொண்டுவர உதவி செய்யப்பட்டது

11. தனுஷ்கோடி மற்றும் மனோஜ் நாராயணசாமி மற்றும் ஏ ராதாகிருஷ்ணன் இவர்களுக்கு திருச்சி விமான நிலையத்தில் தற்காலிக பணிக்கு பரிந்துரை செய்யப்பட்டது

12. திருச்சி எடமலை புது உரை சேர்ந்த கண்ணன் இவர் பார்வையற்ற மாற்றுத்திறனாளி இவருக்கு பணி நிரந்தர ஆணை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

13. பிரதமரின் தேசிய நிவாரண நிதி மருத்துவ உதவி பெறுவதற்கு திருச்சி மாணவர்களுக்குள் மட்டும் இதுவரை 12க்கும் மேற்பட்ட நபர்களுக்கு பெற்றுத் தரப்பட்டுள்ளது

14. மாற்றுத்திறனாளிகள் நலத்திட்டங்களுக்கு கீழ் வழங்கப்படும் இணைப்பு சக்கரம் பொருந்திய மூன்று சக்கர வாகனம் பெறுவதற்கு இதுவரை ஆறு நபர்களுக்கு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

15. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண் 47 சுப்பிரமணியபுரம் நீர்த்தேக்கம் அருகில் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவை மையம் அமைக்க பதினாறு லட்சம் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16. திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குள் நியாயவிடை கடை அமைக்க 99 லட்சம் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

17. திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குள் மின் மோட்டார் பொருத்தி சின்டெக்ஸ் டேங்க் அமைக்க 15 லட்சம் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

18. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண் 54 வேடுவர் தெரு புது தெருவில் அங்கன்வாடி மைய கட்டிடம் கட்டுதல் பணிக்கு 17 லட்சம் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

19. திருச்சிராப்பள்ளியில் மாநகராட்சி வார்டு எண் 5 திருவானைக்காவல் திருச்சி சென்னை ட்ரங்க் ரோடு சமயபுரம் பேருந்து நிறுத்தம் பயணியர் நிழற்குடை அமைக்க 15 லட்சம் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

20. திருச்சி பிஹெச்எல் நிறுவனத்தின் போட்டித் தன்மையை மற்றும் நிதி நிலையை நிலை தன்மையை பாதிக்கும் கொள்முதல் கட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கான கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

21. திருச்சி கே கே நகரில் உள்ள கிடங்கு தொடர்பான பொது மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

22. திருச்சி பால்பண்ணை முதல் துவாக்குடி வரை சர்வீஸ் சாலை அமைத்திட உரிமை மீட்பு குழுவினருடன் இணைந்து மேற்படி சாலை விரிவாக்க பணிக்கு தொடர்ந்து முயற்சி செய்து வரப்படுகின்றது

23. இஸ்லாமியர்களுக்கு திருச்சி விமான நிலையத்தில் தொழுகைக்கு இடம் கொடுத்தது

24. திருச்சி திருவானைக்காவல் இணைக்கும் புறவழிச் சாலையில் சுரங்க பாதை அமைப்பதற்கான பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

25. சஞ்சீவி நகர் பகுதியில் ரயில்வே பாலங்களை ஆய்வு செய்யும் பணி நடைபெற்று வருகின்றது.

இப்படி தொடர்ந்து பல்வேறு சாதனைகளை செய்து சாதனை நாயகனாக மக்கள் மனங்களில் இடம்பெற்று

வருகின்றார் துரை வைகோ அவர்கள். அவரின் பணி என்பது இந்த ஐந்து ஆண்டுகளோடு நின்று விடாமல் தொடர்ந்து இன்னும் பல ஆண்டுகள் திரு துரை வைகோ அவர்கள் திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினராகவும் மக்களின் நாயகனாகவும் என்றென்றும் புகழோடு வாழ்வதற்கு தமிழ்நாடு டுடே தன் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு என்றென்றும் துரை வைகோ அவர்களின் மக்கள் பணியில் அவரோடு துணை நின்று மக்கள் பணி ஆற்ற உறுதி கொள்கின்றது.

**சங்கரராமன் RB**
**உள்ளடக்க எழுத்தாளர்**

# நீலகிரி சாலைகளின் தற்போதய நிலைமையும் அதன் விளைவுகளும்

நீலகிரி மாவட்டம், அதன் இயற்கை அழகு, மலையும் காடும் சூழ்ந்த சுற்றுசூழல், குளிர்ந்த காலநிலை மற்றும் பல சுற்றுலா இடங்களால் அறியப்படும் ஒரு முக்கியமான மலைப்பகுதியாகும். இந்த மலைப்பகுதி, சுற்றுலா பயணிகள் மட்டுமின்றி, தினசரி பயணிக்கும் பொதுமக்களுக்கும் மிகவும் முக்கியமான போக்குவரத்து பாதையாக அமைந்துள்ளது. ஆனால், இங்கு உள்ள சாலைகள் பெரும்பாலும் பராமரிப்பு இன்றி, குறைந்த அகலத்துடன் மற்றும் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் காணப்படுகின்றன. பல இடங்களில் தடுப்பு சுவர் இல்லாததால், சாலையின் ஓரத்திலேயே ஆழமான பள்ளத்தாக்குகள் இருப்பது, குறிப்பாக இரவு நேரங்களில், பயணிகளுக்கு உயிருக்கு அச்சுறுத்தலாக மாறுகிறது.

அண்மையில், ஒரு குழந்தை மோட்டார் சைக்கிளில் பயணம் செய்யும் போது, தடுப்பு சுவர் இல்லாத சாலையில் நிலச்சரிவு ஏற்பட்டதனால் கவிழ்ந்து உயிரிழந்தது. இது போன்ற சம்பவங்கள், நீலகிரியில் வழக்கமாகவே நடைபெறுகின்றன. பள்ளங்கள், சறுக்கும் சாலை மேற்பரப்புகள், ஒளியின்மை, மற்றும் திருப்பங்களில் எச்சரிக்கை சின்னங்கள் இல்லாமை போன்றவை விபத்துகளுக்கான முக்கிய காரணிகளாக உள்ளன. இது போல நிகழும் ஒவ்வொரு விபத்தும் ஒரு குடும்பத்தை துன்பத்தில் ஆழ்த்தும் விதமாக இருக்கும்.

நீலகிரி மாவட்டம் தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களின் எல்லைப் பகுதிகளில் அமைந்துள்ளதால், இங்கு மாநில இடைச்சாலைகள் (State Border Roads) பலவும் உள்ளன. இந்த மாநில எல்லை சாலைகள் பெரும்பாலும் குறைந்த பராமரிப்புடன் காணப்படுகின்றன. ஒரே சாலையில் ஒரு பகுதி சீராக இருக்க, அதன் தொடர்ச்சி பகுதிகள் குழுக்களுடன் உள்ளன, தடுப்பு இல்லாமை, அல்லது மரங்கள் அடைத்துக்கொண்டிருப்பது போன்ற பிரச்சனைகள் நிறைந்திருக்கின்றன.

இந்த சாலைகள் மூலம் டீ, காபி, காய்கறிகள் மற்றும் மசாலா ஏற்றுமதிகள் நடைபெறும் என்பதால், வணிக ரீதியிலும் இவை முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆனால், தடுப்புச் சுவர் இல்லாமை, வாகன நெரிசல், சரியான சிக்னல் வசதிகள் இல்லாதமை ஆகியவை இந்த சாலைகளில் பயணம் செய்வதை மிகவும் அபாயகரமாக்குகின்றன. இதனுடன், பருவமழை காலங்களில் நிலச்சரிவுகள் ஏற்படுவது, சாலைகள் முற்றிலும் சேதமடைவதற்கும் வழிவகுக்கிறது. சில சமயங்களில் இந்த சாலைகள் சில நாட்களுக்கு முற்றிலும் முடக்கப்பட்டுவிடுகின்றன, இதனால் அவசர உதவி மற்றும் மருத்துவ சேவைகளும் பாதிக்கப்படுகின்றன.

இந்த நிலையை சரிசெய்ய, அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தடுப்பு சுவர்கள் கட்டப்பட வேண்டும். வழிகாட்டும் பலகைகள், அபாய எச்சரிக்கை சின்னங்கள், ஒளி வசதிகள் மற்றும் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) கட்டாயமாக நிறுவப்பட வேண்டும். மேலும், அரசு மற்றும் மக்களுக்கு இடையே ஒத்துழைப்பு ஏற்படுத்தி, பொதுமக்களுக்கு சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு முகாம்கள் நடைபெற வேண்டும்.

ஒரு மாணவனின் உயிரிழப்பு ஒரு சமூகத்தின் பொறுப்பு குறைவையும் வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு உயிரும் பாதுகாப்பாக வீடு திரும்பும் நிலையை உருவாக்க, நாம் அனைவரும் ஷ அரசு, மக்கள், ஊடகம், மற்றும் சமூக அமைப்புகள் ஷ ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். நீலகிரி சாலைகள் அழகு மட்டும் அல்ல; அவை பலரின் வாழ்க்கையின் பாதையாகவும் இருக்கின்றன. எனவே, அந்த பாதைகள் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

**கார்த்திகா K**
**மாவட்டச் செய்தியாளர் நீலகிரி**



# கால்நடைகள்

## என்னும் பெருஞ்செல்வம்



உழவர் பெருமக்களிடமும் கிராமத்து சராசரி மக்களிடமும் மாடுகள் ஆடுகள் கோழிகள் என்பது வாழ்வியலோடு கலந்த ஒரு அற்புத பராமரிப்பு. உழவர்களின் உற்ற தோழனாய் பெரும் விவசாய வேலைகளுக்கு மாடுகள் என்பது இன்றியமையாத ஒன்று "கால்நடைகளை தெய்வமாய் போற்றிட்ட காலங்கள்"... நினைத்திட்டால் "நெஞ் சங்கள் நெகிழ்ந்திடும் நேரங்கள்"... ஆடு மாடு கோழி என வீட்டுக்கு வருமானமாய் விளங்கிட்ட காலங்களும் உண்டு அக்காலத்தில் விவசாயத்தின் முக்கிய பங்கு ஆற்றிய கால்நடைகள்.. எந்திரங்களின் வருகையால் ஏர் மாடுகள் எல்லாம் அடி மாடுகளாய் போன கொடுமை காலத்தின் வேதனை..

இயற்கை உரங்கள் மேன்மையான விவசாயம் நோய்களற்ற வாழ்வு என.. கால்நடைகளால் எண்ணற்ற பயன் கண்ட காலங்கள்.. இன்று கிராமங்களில் கூட ஆடு மாடு கோழிகள் அருகிவிட்ட கொடுமை காரணம் வீட்டு வேலைகளோடு ஆடு மாடுகளையும் பராமரித்து சொற்ப வருமானம் பார்த்த காலங்களும் உண்டு வீட்டுக்கு தேவையான பால் .தயிர். மோர் .நெய் என இயற்கையோடு ஒன்றி சுகமாய் வாழ்ந்திட்ட அந்த நாளின் வாழ்வு அற்புதமான ஒன்று...

இன்று நகரமயமான காரணத்தினால் வளர்க்க முடியாத சூழல் இருந்தாலும் கூட பல வீடுகளில் கூண்டுகளில் கோழி வளர்த்து உணவிற்கும் முட்டைக்கும் கோழிகள் பெரும்பங்கு வகிக்கிறது இன்று வீட்டு வேலைகளுக்கு மின்சார சாதனங்களின் பங்கினால் வேலைகள் குறைந்து நோய்கள் அதிகரித்து உடற்பயிற்சிக்காக காலத்தை வீணடிக்கும் அவலத்தை பார்க்கிறோம் அன்று ஆடு மாடுகளை பராமரித்து வருமானத்திற்கு வருமானமும் உடல் உழைப்புக்கு உடல் உழைப்பும் என வாழ்வியலோடு ஆரோக்கியம் கண்ட கலந்த அற்புத காலங்கள்

இன்று ஆடு மாடுகளை கொட்டிலிலேயே வைத்து பராமரிக்கும் அளவுக்கு அதற்கான உணவுகளும் தீவனங்களும் ஏராளம் உண்டு கடந்த காலங்களைப் போல மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்லும் நிலையும் இல்லை ஆனாலும் நம்மிடம் விழிப்புணர்வோ ஆர்வமோ இல்லை பணம் கொடுத்தால் நிமிடத்தில் பாலோ தயிரோ முட்டையோ சிக்கனோ வாங்கிக் கொள்ளலாம் என எந்திர வாழ்வாய் மாறிவிட்ட நிலையில்

கால்நடைகளை மறந்து செயற்கை உரமும் பிராய்லர் கோழி முட்டை என வியாதியை விலை கொடுத்து வாங்கும் துர்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டடு வாழ்வியலை மறந்தோம் ..

வீட்டைச் சுற்றியும் வாசலிலும் கிருமி நாசினியாக நம் மூதாதையர் காலம் தொட்டு மாடுகளின் சாணங்களை தெளித்து ஆரோக்கியத்தை பேணி வாழ்ந்த அந்த நாள் நினைவுகள் நெஞ்சின் கல்வெட்டுகள்.. ஒரு படத்தில் நகைச்சுவை காட்சியில் இது கதவு இல்ல கதவு மாதிரி... இது கட்டில் இல்ல கட்டில் மாதிரி ... என காட்சி பொருளாக கட்டில் கதவு பயனற்று இருக்கும்... அது போல இன்று இது பால் அல்ல பால் போல... முட்டை அல்ல முட்டை போல.. கோழி அல்ல கோழி போல.. என்பதைப்போல எல்லாமும் ரசாயனமாய் சந்தை படுத்தப்பட்டு நாம் வாழ்வின் பெரும்பொருளை மருத்துவமனையில் செலவழிக்கும் அவல நிலை.. வளர்ந்து விட்ட மேலை நாடுகளில் கூட வாழ்வியலோடு கலந்த பாரம்பரியத்தை கைவிடவில்லை ஆனால் நாமோ வீட்டுக்குள்ளே பட்டனை தட்டினாள் மின்சாதனங்களின் உதவியால் நிமிடத்தில் துவைக்க சமைக்க என செயல்பட்டு

..பெரும் நேரத்தை மிச்சப்படுத்தி முற்றத்திற்கே வந்து விட்ட "உலக தொலைக்காட்சியில் தொலைந்து போய் நோய் முற்றி வாழ்க்கையே நரகமாய் அல்லல்படும் அவல நிலை"..

நாம் செய்யும் வேலையும் உடற்பயிற்சியும் வாழ்வியலோடு கலந்த ஒன்றாக இருக்கும் வரை ..நோய்களற்ற ஆரோக்கிய வாழ்வு என்றும் நம் பக்கமே... சொர்க்கமும் நரகமும் வேறு இல்லை நம் வாழ்வு நம் கையில்..

**ஜேப்பி @பன்னீர்செல்வம்**
**சேத்தியாத்தோப்பு கடலூர் மாவட்டம்**

தமிழ்நாடு டுடே இதழில் சமூகப்பற்றாளன் ஞானச்சித்தன் எழுதும் சிந்தனை தொடர்..



# விட்டில் பூச்சிகளாய் இன்றைய இளைஞர்கள்

## வண்ணத்துப் பூச்சிகளாய் பிரபலங்கள்

நீங்கள் எதை நினைக்கிறீர்களோ, அதுவாகவே இருப்பீர்கள், நீங்கள் பலவீனமாக நினைத்தால், நீங்கள் பலவீனமாக இருப்பீர்கள், நீங்கள் உங்களை பலமாக நினைத்தால், நீங்கள் பலமாக இருப்பீர்கள்.

என்றார் வீரத்துறவி விவேகானந்தர்

இளமை என்பது ஒருவர் இளமையாக இருக்கும் வாழ்க்கையின் காலம் . இளமை என்ற சொல் குழந்தைப் பருவத்திற்கும் முதிர்ச்சிக்கும் இடையிலான பருவத்தை குறிக்கிறது.

ஒரு சமுதாயத்தின் முதுகெலும்பாய் இருப்பவர்கள் இளைஞர்கள் ஆவார்கள், அவர்களின் ஆற்றல், ஆளுமை, மற்றும் எதிர் காலத்திற்கான நம்பிக்கைகள் சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு மிகவும் முக்கியம். இளைஞர்களின் உழைப்பும், அர்ப்பணிப்பும் ஒரு தலைமுறையோடு முடிந்து விடுவதில்லை பல தலைமுறைக்கு அது உதவும். தீமையின் வழியில் செல்லும் சமுதாயத்தை மாற்றி நன்மையின் வழியில் செல்வதற்கு இளைஞர்களின் சக்தி பெரிதும் பயன்பட வேண்டும், அதோடு மட்டுமல்லாமல் ஒரு நாடு முன்னேற்றுவதற்கு சக்திவாய்ந்த கருவியாக பிற நாட்டு இளைஞர்கள் திகழ்கிறார்கள். ஆனால் நம் இந்திய நாட்டில் குறிப்பாக தமிழகத்தில் எல்லாம் தலைகீழ்...

படித்து, பட்டம் பெற்று, சமூக மேன்மைக்கு பாடுபடுவதற்கும், ஆக்கபூர்வமான, அறிவுப்பூர்வமான நற்காரியங்களில் ஈடுபடுவதற்கு பெரும்பாலான இன்றைய இளைஞர்கள் ஈடுபாடு இல்லாமல் இருக்கிறார்கள், மது, சிகரெட், கஞ்சா, போதை பழக்கம் போன்ற தவறான வழியில் சென்று தன்னை மாய்த்துக் கொள்கிறார்கள்,

தடம் பதிக்க வேண்டிய வயதில் தடம் மாறிச் செல்வதற்கு வாய்ப்புகள் அதிகம் அதிலிருந்து தப்பித்து வாழ்வில் வெற்றி பெறுபவர்களின் எண்ணிக்கை மிக மிக குறைவாக உள்ளது.

10 இளைஞர்களில் ஒருவர் இருவர் மட்டுமே வாழ்வில் வெற்றி பெறுகிறார்கள் மற்ற இளைஞர்கள் ஏனோ தானோ என்று எல்லாம் தலைவிதி என்று ஆடு மாடு போல உண்டு, உறங்கி, அடுத்த சந்ததியை உருவாகி விட்டு மடிந்து விடுகிறார்கள். வாழ்க்கை எனும் வட்டத்தில் பொதுநலத்தை புறக்கணித்துவிட்டு சுயநலமாக வாழ்வதில் மட்டுமே விருப்பம் கொள்கிறார்கள்.

பல கோடிகள் சம்பளமாக வாங்கிக் கொண்டு படத்தில் மட்டுமே வள்ளலாக ஆனால் நடைமுறை வாழ்வில் வடிகட்டிய கஞ்சனாக இருக்கும் நடிகர்களை நம்பி சினிமா என்கின்ற விளக்கின் வெளிச்சத்தை நாடுகிறார்கள் மற்றும் திரை பிரபலங்களின் பின்னால் தலை தெறிக்க ஓடுகிறார்கள் , கோடிக்கணக்கான ரூபாயில் சூதாட்டம் நடைபெறுகின்ற மிறிலி கிரிக்கெட் போன்ற விளையாட்டு என்கின்ற விளக்கின் வெளிச்சத்தை நாடுகிறார்கள் இரவு பகல் என்று பாராமல் பொன்னான நேரத்தை வீணாக கழிக்கிறார்கள்

வேடிக்கை மனிதர்களாக இருக்கிறார்கள், சமூகத்தில் அண்ணன் தம்பியாக சகோதரத்துவ எண்ணத்தோடு வாழ வேண்டிய இளைஞர்களை திசை திருப்பும் ஜாதிக் கட்சிகள் என்கின்ற விளக்கின் வெளிச்சத்தை நாடுகிறார்கள் அவர்கள் தருகின்ற கோட்டருக்கு கோழி பிரியாணிக்கு கோஷம் போடுகிறார்கள், கண்மூடித்தனமாக ஆதரவு தருகிறார்கள். குறுக்கு வழியில் விரைவில் பணக்காரன் ஆக வேண்டும் என்று ஆன்லைன் ரம்மி என்கின்ற விளக்கின் வெளிச்சத்தை நாடுகிறார்கள் இறுதியில் கடன் சுமை அதிகமாகி தற்கொலை செய்து கொள்கிறார்கள். நமது மடத்தனத்தை முதலீடாக வைத்து பல கோடிகளை சம்பாதிக்கும் ஆன்மீகம் என்கின்ற விளக்கின் வெளிச்சத்தை நாடுகிறார்கள் வாரிசு அரசியல்வாதி போல வாரிசு ஆன்மீகவாதியின் பின்னால் செல்கிறார்கள் "தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்" என்று அய்யன் திருவள்ளுவர் கூறியதை அடியோடு மறந்து விடுகிறார்கள்.

கடந்த 50 ஆண்டுகளாக சினிமா என்கின்ற விளக்கு, கிரிக்கெட் என்கின்ற விளக்கு, ஜாதிக் கட்சி என்கின்ற விளக்கு, ஆன்லைன் ரம்மி என்கின்ற விளக்கு, ஆன்மீகம் என்கின்ற விளக்கு, இப்படி பல விளக்குகளின் வெளிச்சத்தை பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் நாடி விட்டில் பூச்சிகளாக மாய்ந்து விடுகிறார்கள். பல கோடிகளை சம்பாதிப்பதோடு மட்டுமில்லாமல் புகழோடு, செல்வாக்கோடு, செழிப்போடு, வெளிநாட்டு சொகுசு வாழ்க்கை என்று வண்ணத்து பூச்சிகளாக வாழ்கிறார்கள் சினிமா,கிரிக்கெட், ஜாதி தலைவர்கள், ஆன்மீகம் போன்ற துறைகளில் வாழும் பிரபலங்கள்.

உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கைக் கொண்ட இந்தியா உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக திகழ்கிறது, அதில் உலகில் அதிக இளைஞர்களை கொண்ட நாடாக இந்தியா இருக்கிறது. இளைஞர்களின் சக்தியை வைத்து நாம் இந்தியாவை வல்லரசாக முடியும் என்றார் அக்னிச் சிறகை விரித்து அகிலத்தை அண்ணாந்து பார்க்க வைத்த டாக்டர் அப்துல் கலாம் ஐயா அவர்கள்.

அவர் ஒரு புகழ்பெற்ற விஞ்ஞானி மற்றும் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி மட்டுமல்ல, மில்லியன் கணக்கான இளைஞர்களை பெரிய கனவுகளைக் காணவும், அவர்களின் இலக்குகளை அடைய உழைக்கவும் ஊக்கப்படுத்திய ஒரு தொலைநோக்குத் தலைவர்.

இளைஞர்கள் மீது அவர் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். இளைஞர்களை இந்தியாவின் எதிர்கால வல்லரசு என்று கருதி, அவர்களுக்கு கனவு காணவும், அதை நனவாக்க உழைக்கவும் ஊக்கப்படுத்தினார்.இளைஞர்கள் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும் என்றும், இந்தியா வல்லரசாக மாறுவதற்கு இளைஞர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்பட வேண்டும் என்றும் கூறினார்.

இளைஞர்கள் உழைத்து முன்னேற வேண்டும், நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும் இளைஞர்கள் நாட்டின் மீது பற்றுதல் கொண்டு, நாட்டுக்கு பயனுள்ள வகையில் செயல்பட வேண்டும் என்றும், நாட்டின் முன்னேற்றத்துக்காக தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்றும் கூறினார்.

பொருளாதாரம்,கல்வி, மக்கள் தொகை எண்ணிக்கை, நாட்டின் வளம், அடிப்படை வசதி இப்படி அனைத்து வகையிலும் பின்தங்கிய நாடுகள் கூட ஒலிம்பிக் போன்ற சர்வதேச விளையாட்டு போட்டியில் பங்கேற்று தங்கம் வாங்கிய நாடுகளின் வரிசையில் முன்னிலை வகிக்கிறது ஆனால் உலக அளவில் மக்கள் தொகை அதிகம் கொண்ட நம் இந்திய தேசத்தை பரிசு வாங்கிய பட்டியலில் தேட வேண்டியதாக உள்ளது. மொத்தத்தில் இன்றைய இளைஞர்களின் வாழ்வில் சுயநலம் பெருகி விட்டது

பொதுநலம் அருகி விட்டது என்பதே நடைமுறை உண்மை ஆகும். இந்த அவல நிலையை நாம் மாற்ற வேண்டும் இன்றைய இளைஞர்களுக்கு அரசியல் பற்றிய ஒரு புரிதல் வேண்டும். யாரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்கின்ற ஒரு தெளிவு வேண்டும். இன்றைய இளைஞர்கள் மாறாத வரை நாட்டில் எதுவும் மாறாது சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால் ஆட்சிகள் மாறும் காட்சிகள் ஒருபோதும் மாறாது.

ஆம் உன்னால் முடியும் தம்பி என்கின்ற திரைப்படத்தில் கவிஞர் புலமைப்புத்தன் அவர்கள் எழுதிய பாடலை போல இந்த அவலமான நிலைமை இன்னும் நீடித்துக் கொண்டேதான் இருக்கும்.

**புஞ்சை உண்டு நஞ்சை உண்டு**
**பொங்கிவரும் கங்கை உண்டு**
**பஞ்சம் மட்டும் இன்னும் இங்கு மாறவில்ல**
**எங்க பாரதத்தில் சோத்துச்சண்ட தீரவில்ல**
**வீதிக்கொரு கட்சியுண்டு**
**சாதிக்கொரு சங்கமுண்டு**
**நீதி சொல்ல மட்டும் இங்கு நாதியில்ல சனம்?**
**நிம்மதியா வாழ ஒரு நாளுமில்ல**
**இது நாடா இல்ல வெறும் காடா**
**இதை கேட்க யாரும் இல்லை தோழா**
**இதுநாடா இல்ல வெறும் காடா இதை கேட்க யாரும் இல்லை தோழா**

**( சிந்தனை தொடரும் )**
**சமூகப்பற்றாளன் ஞானச்சித்தன்**

# பிளாஸ்டிக் மாசுபாடு சவால்களை எதிர்கொள்ளும் சுற்றுலா சொர்க்கம்



பேராசிரியர் டாக்டர் அசோக்குமார் வீரமுத்து
பேராசிரியர் – தலைவர்
கழிவு மேலாண்மை மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மையம், SIMATS,
சவீதா பல்கலைக்கழகம், சென்னை.

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் அமைந்துள்ள நீலகிரி மாவட்டம், "மலைகளின் ராணி" என்று பொருத்தமாக அழைக்கப்படுகிறது, இது அதன் குளிர்ந்த குளிர்காலம், மூடுபனி மழைக்காலம் மற்றும் லேசான கோடைகாலங்களில் ஓய்வெடுக்க விரும்பும் சுற்றுலாப் பயணிகளை ஆண்டு முழுவதும் ஈர்க்கும் ஒரு காந்தமாகும். மரகத தேயிலைத் தோட்டங்கள், கேத்தரின் நீர்வீழ்ச்சி போன்ற அருவிகள் மற்றும் யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட பல்லுயிர் பெருக்கத்திற்கு பெயர் பெற்ற இந்தப் பகுதி, தினமும் 4050 டன் கழிவுகள் உருவாகின்றன, இதில் 2030% பிளாஸ்டிக்கால் ஆனது. உச்ச பருவங்களில் 2.5 மில்லியனுக்கும் அதிகமான வருடாந்திர சுற்றுலாப் பயணிகள் 810 டன் பிளாஸ்டிக் கழிவுகள் அதிகரித்துள்ளன. முதுமலை புலிகள் சரணாலயம் 2020 முதல் பிளாஸ்டிக் உட்கொள்ளல் காரணமாக 30% விலங்கு இறப்புகளை பதிவு செய்கிறது. 2022 இந்திய அறிவியல் நிறுவனத்தின் ஆய்வில் 70% நீர்நிலைகளில் மைக்ரோபிளாஸ்டிக் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது, இது முக்கிய குடிநீர் ஆதாரங்களை மாசுபடுத்துகிறது. தமிழ்நாட்டில் 2019 பிளாஸ்டிக் தடை இருந்தபோதிலும், இணக்கம் 40% க்கும் குறைவாகவே உள்ளது, சட்டவிரோத பயன்பாடு பரவலாக உள்ளது. 85% கொள்ளளவில் இயங்கும் அவலாஞ்ச் குப்பைக் கிடங்கு, நிலத்தடி நீரில் நச்சுக்களை கசிந்து, 15 கிராமங்களை பாதிக்கிறது. ஊட்டியில் பிளாஸ்டிக் எரிப்பதால் சுவாச நோய்கள் 25% (2018-2023) அதிகரித்துள்ளன. மண் பரிசோதனைகள் விவசாய நிலங்களில் 1218% பிளாஸ்டிக் உள்ளடக்கத்தைக் காட்டுகின்றன, இது தேயிலை மற்றும் காய்கறி விளைச்சலை பாதிக்கிறது. சுற்றுலா, உள்ளூர் கழிவுகளில் 65% ஐ வெளியேற்றுகிறது, இது சூழலியல் மற்றும் ₹500 கோடி சுற்றுலா பொருளாதாரம் இரண்டையும் ஆபத்தில் ஆழ்த்துகிறது. அதிகரித்து வரும் இந்த நெருக்கடியைக் கட்டுப்படுத்த அவசர முறையான சீர்திருத்தங்கள் மிக முக்கியமானவை.

## சூழலியல் மற்றும் மனித வீழ்ச்சி

பிளாஸ்டிக் கழிவுகள் வடிகால் அமைப்புகளை அடைத்து, மழைக்காலங்களில் நிலச்சரிவுகளை அதிகரிக்கின்றன. முறைசாரா முறையில் எரிக்கப்படும்போது, அது டையாக்ஸின்கள் போன்ற புற்றுநோய்களை வெளியிடுகிறது, சமூகங்களில் சுவாசக் கோளாறுகளை மோசமாக்குகிறது. பிளாஸ்டிக் நச்சுகளை வெளியேற்றுவதால் மண் வளம் குறைந்து, தோட்டக்கலை சார்ந்த இந்தப் பகுதியில் விவசாயத்தை பாதிக்கிறது. முதன்மை வருவாய் ஆதாரமான சுற்றுலா, இயற்கை காட்சிகள் மோசமடைவதால் நீண்டகால அபாயங்களையும் எதிர்கொள்கிறது.



2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்குகளை தடை செய்திருந்தாலும், நீலகிரியில் இந்த விதிகள் கடுமையாகப் பின்பற்றப்படுவதில்லை. பிளாஸ்டிக் மாசுபாட்டைக் குறைக்க, கடுமையான நடவடிக்கை தேவை நேரடியாக அபராதம் விதித்தல், சுற்றுலாப் பகுதிகளில் சிறந்த சோதனைகள் மற்றும் விதிகளைப் பின்பற்றாத கடைக்காரர்களுக்கு அபராதம். அதிக கழிவு வரிசைப்படுத்தும் அலகுகள் அமைக்கப்பட வேண்டும், மேலும் வணிகங்கள் பிளாஸ்டிக் இல்லாத பேக்கேஜிங்கைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்பட வேண்டும். சமூகத்தால் வழிநடத்தப்படும் தூய்மைப்படுத்தும் இயக்கங்கள், முறையான கழிவு சேகரிப்புடன், குப்பைக் கிடங்குகள் நிரம்பி வழிவதைத் தடுக்கலாம் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாக்க வேண்டும்.

ஊட்டியின் “உங்கள் சொந்த பாட்டிலைக் கொண்டு வாருங்கள்” பிரச்சாரம் மற்றும் பசுமை ஹோட்டல்கள் போன்ற சுற்றுச்சூழல் நட்பு நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். சுற்றுலாப் பயணிகள் நீலகிரிக்குச் செல்வதற்கு முன்பு இயற்கையைப் பற்றி அறிந்துகொண்டு சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான உதவிக்குறிப்புகளைப் பெற வேண்டும். பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் இதைப் பற்றி மக்களுக்குக் கற்பிக்க உதவலாம். சுற்றுலா செல்வாக்கு செலுத்துபவர்கள் மற்றும் சமூக ஊடகங்களும் சுத்தமான மற்றும் பொறுப்பான சுற்றுலாவை ஆதரிக்கலாம். இறுதியாக, வழிகாட்டப்பட்ட மலை நடைப்பயணங்கள் மற்றும் வனவிலங்கு பயணங்கள் போன்ற பிளாஸ்டிக் இல்லாத செயல்பாடுகள் இயற்கையைக் காப்பாற்றலாம், வேலைவாய்ப்புகளை உருவாக்கலாம் மற்றும் உள்ளூர் மக்கள் வாழ்க்கையை சம்பாதிக்க உதவும்.

## முடிவில்

நீலகிரியின் அவலநிலை ஒரு துயரமான முரண்பாட்டை உள்ளடக்கியது: பிளாஸ்டிக் கழிவுகளால் மூச்சுத் திணறடிக்கும் ஒரு இயற்கை சொர்க்கம். சுற்றுலாவால் இயக்கப்படும் மாசுபாடு சுற்றுச்சூழல் அமைப்புகளை முடக்கி, வனவிலங்குகளை ஆபத்தில் ஆழ்த்தி, வாழ்வாதாரத்தை அச்சுறுத்தும் நிலையில், மெத்தனம் ஒரு விருப்பமல்ல. கூட்டு நடவடிக்கை கடுமையான கொள்கை அமலாக்கம், சுற்றுலா பொறுப்புக்கூறல் மற்றும் சமூகத்தால் இயக்கப்படும் கழிவு மேலாண்மை மிக முக்கியமானது. குறுகிய கால ஆதாயங்களை விட நிலைத்தன்மைக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் மட்டுமே இந்த யுனெஸ்கோ பொக்கிஷம் அதன் சுற்றுச்சூழல் சமநிலையை மீட்டெடுக்கவும், இயற்கையும் சுற்றுலாவும் இணக்கமாக இணைந்திருக்கும் எதிர்காலத்தைப் பாதுகாக்கவும் முடியும். இப்போதே செயல்படுங்கள், அல்லது என்றென்றும் இழக்க நேரிடும்.



திருவண்ணாமலை மாவட்டம் ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்வு நாள் கூட்டத்தில் செயற்கை கால் வேண்டி மனு அளித்த மாற்றுத்திறனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ் இ.ஆ.ப அவர்கள் செயற்கை கால்களை வழங்கினார்கள் இதனால் மாற்றுத் திறனாளிகள் மகிழ்ச்சியடைந்தனர்...

# தெற்கு வட்டத்தில் ஜமாபந்தி.

40 நாட்கள் பிரச்சனைக்கு மனு அளித்த அரை மணி நேரத்தில் தீர்வு.

மாவட்ட வழங்கல் அலுவலர் அதிரடி.

திருப்பூர் தெற்கு வட்டத்தில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர் ரவிச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஜமாபந்தி நிகழ்வில் திருப்பூர் நுகர்வோர் நல முன்னேற்ற சங்கத்தின் நிறுவத்தலைவர் சமூக ஆர்வலருமான ஈ.பி.அ.சரவணன் கலந்து கொண்டு மனு அளித்தார். இதில் சமூக ஆர்வலர்கள் ரிகிரி. கிருஷ்ணசாமி, வஞ்சிபாளையம் துரை, ஈஸ்வரன், உள்ளிட்டவர்கள் உடனிருந்தனர்.

அப்போது சர்கார் பெரியபாளையம் பகுதியிலுள்ள கூலி தொழிலாளி ஒருவர் தன்னுடைய மகனுக்கு கல்லூரி சேர்க்க ரேசன்கார்டை வேற முகவரியிலுள்ளதை ஊத்துக்குளி சர்கார் பெரியபாளையம் பகுதியிலுள்ள முகவரிக்கு மாற்றம் செய்ய வேண்டுமென கடந்த 40 நாட்களாக மிகவும் சிரமப்பட்டு வருகின்றதாக கூலி தொழிலாளி ஈ.பி.அ.சரவணனிடம் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து உடனடியாக மேற்படி கூலி தொழிலாளி மற்றும் அவரது மகன் உள்ளிட்டவர்களை மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை



அலுவலரிடம் நேரிடையாக அழைத்து சென்று உடனடியாக இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக சம்பந்தப்பட்ட மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர் உரிய தீர்வுகண்டு ரேசன்கார்டு முகவரியை உடனடியாக மாற்றம் செய்யப்பட்டு அதன் நகலை ஊத்துக்குளி வட்ட குடிமைப்பொருள் தாசில்தார் கணேஷ்வரி

அவர்கள் சம்பந்தப்பட்ட கூலி தொழிலாளி மற்றும் அவரது மகனிடம் வழங்கப்பட்டது

உடனடியாக உரிய தீர்வுகண்டு ரேசன்கார்டு முகவரி மாற்றம் செய்த மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலருக்கும் ஈ.பி.அ.சரவணனுக்கும் நன்றி தெரிவித்தனர்.

# RTI-யில் வெளியான அதிர்ச்சித் தகவல்.

திருப்பூர் மாவட்டத்தில் பதிவுபெற்ற நுகர்வோர் தன்னார்வ அமைப்புகள் குறித்த விபரங்களை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் திருப்பூர் நுகர்வோர் நல முன்னேற்ற சங்கத்தின் நிறுவனத்தலைவர் ஈ.பி.அ.சரவணன் திருப்பூர் (பதிவுத்துறை) மாவட்டப்பதிவாளர் அலுவலக

பொதுத்தகவல் அலுவலருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (RTI) அடிப்படையில் கடந்த ஏப்ரல் 24ம் தேதியிட்ட மனு ஒன்றை அனுப்பியிருந்தார்.


அந்த மனுவில் திருப்பூர் மாவட்ட பதிவுத்துறையில் 24-04-2025ம் தேதி வரை பதிவு செய்துள்ள அனைத்து நுகர்வோர் அமைப்புகளின் பெயர் , முகவரி, பதிவு எண்கள், காலாவதியானது, தற்போது நடைமுறையிலுள்ளது உள்ளிட்ட விபரங்கள் குறித்த கேள்விக்கு அளிக்கப்பட்ட பதில் மூலம் அதிர்ச்சித்தகவல் வெளியாகி உள்ளது.

அதன் அடிப்படையில் மேற்கண்ட திருப்பூர் (பதிவுத்துறை) மாவட்டப்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பொதுத்தகவல் அலுவலர், திரு.சு.ஜெயபிரகாஷ், எம்.எஸ்.சி. அவர்கள் அளித்துள்ள தகவலில்

திருப்பூர் மாவட்ட பதிவுத்துறையில் பதிவு செய்துள்ள அனைத்து நுகர்வோர் அமைப்புகளின் எண்ணிக்கை மற்றும் விபர பட்டியல், புதுப்பபிக்கப்பட்டுள்ளது காலாவதியானது தனிதனியாக அனைத்து நுகர்வோர் அமைப்புகளின் எண்ணிக்கை மற்றும் அமைப்புகளின் பெயர், முகவரி பதிவு எண்கள் உள்ளிட்ட விபரங்களை தகவலாக வழங்க கோரப்பட்டுள்ளது. இது தொடர்பாக, இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 1இல் கண்டுள்ள அட்டவணையில் வரிசை எண் 1 முதல் 7 வரையுள்ள .1. தி கன்ஸூமர் புரோடக்சன் சென்டர் , 2. தி கன்ஸூமர் கேர் அசோசியேஷன், 3.கன்ஸூமர் அபாரன்ஸ் விங், 4. நல்லூர் நுகர்வோர் நல மன்றம், 5. புதிய திருப்பூர் நுகர்வோர் பாதுபாப்பு சங்கம், 6. பனியன் சிட்டி கன்ஸூமர் வெல்பேர் ஆசோசியேசன், 7. திருப்பூர் நுகர்வோர் நல முன்னேற்ற சங்கம், உள்ளிட்ட நுகர்வோர் சங்கங்கள் மட்டுமே தற்போது வரை நடைமுறையிலுள்ளது ( 7 சங்கங்கள் ) என்ற அதிர்ச்சித்தகவலை அளித்துள்ளனர்.

மேலும் 45 நுகர்வோர் சங்கங்கள் ஏற்கனவே பதிவு செய்துள்ள நிலையில் 7 சங்கங்கள் தற்போது வரை நடைமுறையிலுள்ளது.

இது தொடர்பாக ஈ.பி.அ.சரவணன் கூறுகையில் தமிழ்நாடு சங்கப்பதிவுச்சட்டம் 1975 பிரிவு 26 ன் படி பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் ஒவ்வொரு நிதியாண்டு முடிந்த ஆறு மாத காலத்திற்க்குள் பொதுக்குழு



| | | | |
|---|---|---|---|
| 1 | THE CONSUMER PROTECTION CENTRE | [illegible] | [illegible] |
| 2 | THE CONSUMER CARE ASSOCIATION | [illegible] | [illegible] |
| 3 | CONSUMER AWARENESS WING | [illegible] | [illegible] |
| 4 | [illegible] | [illegible] | [illegible] |
| 5 | [illegible] | [illegible] | [illegible] |
| 6 | [illegible] | [illegible] | [illegible] |
| 7 | [illegible] | [illegible] | [illegible] |

கூட்டத்தினை நடத்த வேண்டும். மேலும் தமிழ்நாடு சங்கப்பதிவுச்சட்டம் 1975 பிரிவு 16ன் படி பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் பொதுக்குழு நடந்த தேதியிலிருந்து ஆறு 'மாதத்திற்க்குள் வரவு செலவு கணக்குகளை தாக்கல் செய்ய வேண்டும் ஆனால் பெரும்பாலானவர்கள் இதை பின்பற்றுவதில்லை.

மேலும் திருப்பூர் மாவட்டத்திலுள்ள பதிவு பெற்ற நுகர்வோர் அமைப்புகளின் விபர பட்டியல்களை ஒருங்கிணைத்து அனைத்து அரசு துறைகளுக்கு அனுப்பாமல் உள்ளதால் மாவட்டத்தில் கடந்த பல மாதங்களாக நுகர்வோர் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படாததால் அரசுத் துறைகள் மீதான நுகர்வோரின் குறைகளுக்கு உரிய காலத்தில் தீர்வு கிடைக்காததால் உடனடியாக தற்போது கிடைக்க பெற்றுள்ள நுகர்வோர் அமைப்புகளின் விபர பட்டியல்களை ஒருங்கிணைத்து அனைத்து அரசுத் துறைகளுக்கும் அனுப்பி மாவட்ட ஆட்சியர் தலைமையிலும், மாவட்ட அளவில் ஒவ்வொரு துறை சார்ந்த தலைவர்களால் தன்னார்வ நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்களுடனான காலாண்டுக் கூட்டங்கள் நடைபெறுவதை கண்காணித்து உறுதி செய்ய வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

**சரவணக்குமார்**
**மாவட்டச் செய்தியாளர் திருப்பூர்**

# Taxi Bot .. ஆல் மெருகேறும் டெல்லி ஏர்போர்ட்..



உலகின் முதல் செயல்பாட்டு TaxiBot அமைப்பை அறிமுகப்படுத்துவதன் மூலம் டெல்லி விமான நிலையம் நிலையான விமானப் போக்குவரத்தில் ஒரு முன்னோடி பாய்ச்சலை ஏற்படுத்தியுள்ளது.

இந்த அரை ரோபோடிக், பைலட் கட்டுப்படுத்தப்பட்ட இழுவை வாகனம், விமானங்களை அவற்றின் இயந்திரங்களை இயக்காமல் பார்க்கிங் விரிகுடாவிலிருந்து ஓடுபாதைக்கு டாக்ஸி செய்ய அனுமதிக்கிறது.

இதன் விளைவாக எரிபொருள் நுகர்வு, ஒலி மாசுபாடு மற்றும் கார்பன் வெளியேற்றம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க குறைப்பு ஏற்படுகிறது,

இது டெல்லியை சுற்றுச்சூழலுக்கு உகந்த விமான நிலைய செயல்பாடுகளில் உலகளாவிய தலைவராக நிலைநிறுத்துகிறது.

பாரம்பரியமாக, விமானங்கள் தங்கள் சொந்த இயந்திரங்களைப் பயன்படுத்தி டாக்ஸி செய்கின்றன,

புறப்படுவதற்கு முன்பே அதிக அளவு விமான எரிபொருளை எரிக்கின்றன.

TaxiBots இடத்தில் இருப்பதால், தரை இயக்கத்தின் போது இயந்திரங்கள் அணைக்கப்படும்,

மேலும் விமானம் புறப்படுவதற்கு ஓடுபாதையை அடையும் வரை ரோபோ அமைப்பால் இழுக்கப்படுகிறது.

ஓடுபாதையில் வந்தவுடன், இயந்திரங்கள் புறப்படுவதற்கு சரியான நேரத்தில் தொடங்கப்படுகின்றன.

இது எரிபொருளைச் சேமிப்பது மட்டுமல்லாமல், இயந்திர கூறுகளில் தேய்மானத்தையும் குறைக்கிறது.

TaxiBot அமைப்பைப் பயன்படுத்தும் ஒவ்வொரு விமானமும் தோராயமாக 213 லிட்டர் விமான எரிபொருளைச் சேமிக்கிறது.

பெரிய அளவில், இந்த தொழில்நுட்பம் ஆண்டுதோறும் மில்லியன் கணக்கான லிட்டர் எரிபொருளைச் சேமிக்கும் மற்றும் செயல்பாட்டு செலவுகளை $35 மில்லியனுக்கும் அதிகமாகக் குறைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கூடுதலாக, கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றத்தைக் குறைப்பது, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் தூய்மையான போக்குவரத்து அமைப்புகளுக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை ஆதரிக்கிறது.

டாக்ஸிபாட் விமானி அறையிலிருந்து விமானியால் கட்டுப்படுத்தப்படுகிறது,

இது டாக்ஸி செயல்பாட்டின் போது முழு கட்டுப்பாட்டையும் பாதுகாப்பையும் உறுதி செய்கிறது.

இது ஏர்பஸ் கி320 மற்றும் போயிங் 737 தொடர்கள் உட்பட குறுகிய மற்றும் அகலமான விமானங்களுடன் இணக்கமானது.

இந்த பல்துறை வடிவமைப்பு பல்வேறு விமானக் குழுக்களில் பரவலாக ஏற்றுக்கொள்ள அனுமதிக்கிறது.

டெல்லி விமான நிலையம் டாக்ஸிபாட் தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வது விமான நிலைய கண்டுபிடிப்பு மற்றும் காலநிலை உணர்வுள்ள விமானப் போக்குவரத்தில் ஒரு புரட்சிகரமான படியைக் குறிக்கிறது.

உலகளாவிய விமான நிலையங்கள் பசுமையான தீர்வுகளைத் தேடுகையில், தொழில்நுட்பம் எவ்வாறு செயல்திறன் மற்றும் நிலைத்தன்மை இரண்டையும் இயக்க முடியும் என்பதற்கு டெல்லி ஒரு சக்திவாய்ந்த உதாரணத்தை அமைக்கிறது.

**வெங்கடேஷ் K**
**செய்தி ஆசிரியர்**



# ஏழை மாணவர்களை சாதனையாளர்களாக்கும்

# தென்பரை பயிற்சி மையம்..




திருவாரூர் மாவட்டம் தென்பரை ஊராட்சியில் கிராமப்புற மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய இளைஞர்கள் போட்டித்தேர்வை எளிதாக எதிர்கொண்டு அரசு வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான பயிற்சியைத் தென்பரை இலவச பயிற்சி மையம் 2016 செப்டம்பர் முதல் வழங்கி வருகிறது.

கடந்த பத்தாண்டுகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட போட்டித் தேர்வர்களுக்கு இம்மையத்தின் மூலம் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 2017 ~ 18 ஆம் ஆண்டில் முதன் முதலாக கற்பகநாதர்குளம் கிராமத்தைச் சேர்ந்த ரெ.அமுதா என்பவர் டிஎன்பிஎஸ்ஸி தொகுதி 4 இல் இளநிலை உதவியாளராக கோயமுத்தூர் நீதிமன்றத்தில் பணியில் சேர்ந்தார். அதனைத் தொடர்ந்து 2021 ~ 22 ஆம் ஆண்டில் மன்னார்குடி நீதிமன்றத்தில் அ.நித்யா, எம்.ஆர்.ரம்யா ஆகியோரும், கும்பகோணம் நீதிமன்றத்தில் அ.இலக்கியதாசனும் பணியில் சேர்ந்தனர். 2022 ~ 23 ஆம் ஆண்டில் திருக்குவளையை அடுத்த செம்பியமங்கலத்தைச் சேர்ந்த மு.ஜெயக்குமார் ஃபீல்டு சர்வேயராக கடலூர் மாவட்டத்திலும், ச.ஐயப்பன் இரண்டாம்நிலை காவலராகவும் பணியில் சேர்ந்தனர். அதே வருடத்தில் டிஎன்பிஎஸ்ஸி தொகுதி 4 இல் இளநிலை உதவியாளராக கா.சித்ரா, பெ.ஜான்சி எமிலி, ரா.கோகிலாராணி, வே.முத்துமணி, நா.நெல்சன், இரா.சிந்துஜா, ச.பிரகதீஷ் ஆகியோரும், தட்டச்சராக ர.வர்ஷா, ம.அருள்தேவியும் பணியில் சேர்ந்தனர்.

2023 ~ 24 ஆம் ஆண்டில் ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்திய தேர்வில் மாநில அளவில் 32 பணியிடங்களில் ஒருவராக இம்மையத்தில் பயின்ற பெ.ஜான்ஸி எமிலி தேர்ச்சி பெற்று மன்னார்குடி வட்டார கல்வி அலுவலராக பணியேற்றார். 2024 ஆம் ஆண்டில் மத்திய அரசின் அஞ்சல்துறை நடத்திய தேர்வில் தேர்ச்சி பெற்று மு. அமலா, தெ.தீபா, பா.செந்தில்குமார் ஆகியோர் பணியில் சேர்ந்துள்ளனர். மேலும் க.கயல்விழி மன்னார்குடி கூட்டுறவு நிறுவனத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளார். 2024 ~ 25 ஆம்ண்டில் டிஎன்பிஎஸ்ஸி தொகுதி 4 இல் இளநிலை உதவியாளராக ஞா.ஹரிகரன், அ. இலக்கியதாசன், த.ராணி, நி.பாண்டிலெட்சுமி ஆகியோரும், ரா.விஜய் தட்டச்சராகவும், மு.ஜீவிகா சுருக்கெழுத்து தட்டச்சராகவும் பணியில் சேர்ந்துள்ளனர்.

கடந்தவாரம் வெளியான மெட்ராஸ் உயர்நீதிமன்ற எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவில் இம்மையத்தின் இ.செல்வகுமார், இ.ஜெயஸ்ரீவித்யா, கு.சபிதா ஆகியோர் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 14 பணியிடங்களில் 3 பணியிடங்களை பெற்று பெருமை சேர்த்துள்ளனர். இதுவரை ஒரு ரூபாய் செலவில்லாமல் 30 அரசுப்பணியாளர்களை உருவாக்கி அந்த குடும்பங்களில் ஒளிவிளக்கு ஏற்றிவைத்திருக்கும் தென்பரை இலவச பயிற்சி மையத்தை பொதுமக்கள் அனைவரும் பாராட்டி வருகின்றனர். ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி நா.சுப்ரமணியன், அரசுப்பள்ளி ஆசிரியர் சு.வைரமுத்து, அரசுப்பள்ளி இளநிலை உதவியாளர் மு.சீத்தாலெட்சுமி ஆகியோர் போட்டித்தேர்வர்களுக்கு சிறப்பான பயிற்சியை வழங்கி வருகின்றனர்.

நா. சுப்ரமணியன், நிறுவுநர்: கிரமப்புற மாணவர்களிடம் தாழ்வு மனப்பான்மையை போக்குவதே எங்களின் முதற்கட்ட பணியாக அமைந்தது. தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வின் பயத்தைப் போக்கி முயற்சி செய்து கடின உழைப்பால் படித்தால் இலக்கை அடைய முடியும் என்ற தன்னம்பிக்கையை விதைத்துக்கொண்டிருக்கின்றோம்.

ஒருங்கிணைந்த டெல்டா மாவட்டத்தில் அரசுப்பணியாளர்களின் விகிதாச்சாரத்தை அதிகப்படுத்த வேண்டும் என்பதே எங்கள் முக்கியமான இலக்காக உள்ளது. சுதந்திரத்திற்கு முன்னர் 1942 இல் தமிழ்நாட்டில் முதன் முதலாக விவசாய சங்கம் தென்பரையில் பி.சீனிவாசராவ் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டு பசுமைப்புரட்சிக்கு வித்திட்ட இக்கிராமத்தில் சத்தமில்லாமல் ஒரு சமுதாய புரட்சியை நடத்தி வருகின்றோம்.

சு. வைரமுத்து, இயக்குநர்: சாதிக்கத் துடிக்கும் எத்தனையோ கிராமப்புற இளைஞர்களுக்கு கலங்கரை விளக்கமாக திகழும் இப் பயிற்சி மையம் அரசுப் பணியில் சாமானியர்களும் அமரலாம் என்பதை சாதித்துக் காட்டி வருகிறது. சமூக, பொருளாதார நீதியினை வழங்கிட தன்னால் இயன்றவரை இயங்கி வருகிறது. கல்வி பொது சேவை என எல்லாத் துறைகளிலும் வியாபித்துக் கொண்டிருக்கின்ற பயிற்சி மையம் இன்னும் பல இளைஞர்களுக்கு அரசு பணி கிடைத்திட அயராது பாடுபடும் என்பதை உறுதியோடு சொல்லலாம். கிராமப்புறத்தில் பின் தங்கிய பகுதியில் இயங்கி வந்து இன்று எல்லோருக்குமான ஒரு மையமாக திகழ்வதில் பெருமையே. விவசாயத்தையே பெரிதும் நம்பி வந்த எங்களின் டெல்டா பகுதியில் அடுத்த தலைமுறைகளை அரசு பணியில் கொண்டு சேர்த்து ஊழலற்ற ஒரு தேசத்தை அமைத்திட அயராது பாடுபடுகிறோம்.

மு. சீத்தாலெட்சுமி, பயிற்சியாளர் :

முதல் தலைமுறை பட்டதாரிகளாக இருக்கிற கிராமப்புற மாணவர்களை முதல் தலைமுறை அரசு ஊழியர்களாக மாற்றுகிற பணியில் நானும் ஒரு




துளியாய் இருப்பதில் மகிழ்வடைகிறேன். பெண்களுக்கான பொருளாதார சுதந்திரம் என்பது பெண் தன்னைத் தானே காத்துக் கொள்வதற்கும் தன்னைச் சார்ந்தோரை கவனித்துக் கொள்வதற்கும் தேவைப்படும் ஒரு மிகப்பெரிய ஆயுதம். இங்குள்ளவர்களில் பெரும்பான்மையானவர்கள் பெண்கள் என்பதால் இக்கருத்தை பதிவு செய்கிறேன். கணித பகுதியில் 100 சதவீத மதிப்பெண் பெறுவதற்கான எளிய வழிகளை எங்கள் போட்டித் தேர்வர்களுக்கு பயிற்றுவித்து வெற்றி காண்கிறோம் என்பதை எங்கள் மையத்தின் தனிச்சிறப்பாகக் கருதுகிறேன்.

மன்னார்குடி மிட்டவுன் ரோட்டரி சங்கம் மற்றும் தென்பரை ரோட்டரி சமுதாயக் குழுமம் மூலம் தென்பரை இலவச பயிற்சி மையம் நடைபெற்று வருகிறது.

தென்பரை ரோட்டரி சமுதாயக் குழுமத்தின் தலைவர் பி. மணிவண்ணன்.

**தியாகராஜன் சென்னை**



# முதலமைச்சரின் டெல்லி விசிட்..



## பாய்ச்சலா? பதுங்களா?

2014 இல் மத்தியில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அமைத்த பிறகு அதுவரை இருந்து வந்த திட்ட கமிஷன் கலைக்கப்பட்டு அதற்கு பதிலாக பிரதமர் தலைமையில் நிதி ஆயோக் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது அதன்படி 2015ல் இருந்து ஒவ்வொரு ஆண்டும் பிரதமர் தலைமையில் மாநில முதல்வர்கள் யூனியன் பிரதேசங்களின் முதல்வர்கள் துணைநிலை கணவனார்கள் பங்கேற்கும் நிதி ஆயோக் நிர்வாக குழு கூட்டம் நடந்து வருகின்றது, அதன்படி டில்லி பாரத் மண்டபத்தில் பத்தாவது நிதி ஆயோக் நிர்வாக குழு கூட்டம் பிரதமர் மோடி தலைமையில் நேற்று நடைபெற்றது .

திமுக அரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை நிதி ஆயோக் கூட்டத்திற்கு தனது அமைச்சரவையில் இருந்து நிதி அமைச்சரை அனுப்பி வைத்திருந்த முதலமைச்சர் மு க ஸ்டாலின் முதன்முறையாக நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்க சென்றிருப்பது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது, எதிர்க்கட்சிகள் வெண்சாமரம் வீசுவதற்காக தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் டெல்லி பயணம் செய்திருப்பதாக கிண்டல் செய்து கொண்டிருக்கும் வேளையில் அவர் நிதி ஆயோக் கூட்டத்திற்கு சென்றது மத்திய அரசோடு சமரசம் செய்து கொள்வதற்காக வா அல்லது தமிழ்நாட்டிற்கு தேவையான நிதியை போராடி பெற்று வருவதற்காகவா என்கின்ற மில்லியன் டாலர் கேள்வி நம்முள் எழுந்துள்ளது, அதற்கு காரணம் சமீப காலமாக திமுக அரசும் அதன் அமைச்சர்களும் தொடர்ந்து ஊழல் வழக்குகளில் சிக்கி வருவதும் அமலாக்கத் துறையின் அதிரடி நடவடிக்கைகளுமே நம்மை நோக்கி இந்த கேள்வியை உருவாக்குகின்றது .

டாஸ்மாக் ஊழல் உச்சகட்டத்தை தொட்டிருக்கும் வேளையில் உச்சநீதிமன்றம் அமலாக்கத்துறைக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துள்ளது ஒருவகையில் திமுகவிற்கும் திமுக அரசிற்கும் ஒரு வெற்றி கொண்டாட்டத்தை தான் உருவாக்கியுள்ளது .

இந்த சூழலில் டெல்லியில் நடைபெறும் நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்றிருக்கும் முதல்வர் தன் அமைச்சரவை சகாக்களுக்காக அங்கு வாதாடினரா என்பது தெரியாது ஆனால் தமிழகத்திற்கு சேர வேண்டிய நிதியைபற்றி அவர் ஆவேசமாக வாதாடி இருக்கின்றார் என்பது இன்றைய செய்தித்தாள்களையும் தொலைக்காட்சி செய்திகளையும் பார்க்கும் பொழுது நன்கு புலப்படுகின்றது

இந்த நேரத்தில் நாம் சற்றே பின்னோக்கி 2011 ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற திட்ட கமிஷன் கூட்டத்தில் அன்றைய முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா எடுத்த அதிரடி நடவடிக்கை பற்றி நினைவு கூறத் தோன்றுகின்றது, 2011ல் டெல்லியில் நடைபெற்ற திட்ட கமிஷன் கூட்டத்தில் பங்கேற்பதற்காக டெல்லி சென்று இருந்த முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா ஆவேசமாக தமிழ்நாட்டிற்கு தேவையான நிதியை பற்றி பேசிக்கொண்டிருந்த பொழுது பத்து நிமிடங்கள் முடிந்து விட்டது என்று மணி அடிக்கப்பட்டது உடனே ஆவேசமடைந்த அன்றைய தமிழக முதலமைச்சர் உடனடியாக தான் பேசுவதை நிறுத்திவிட்டு மிகவும் கோபத்தோடு அந்த கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்தது அன்றைய சூழலில் மிகப்பெரிய பரபரப்பை உருவாக்கியது அதை போன்ற ஒரு சூழல் இங்கேயும் உருவாகுமா என்பதை நாம் கவனித்து தான் வருகின்றோம் ஆனால் அப்படியான ஒரு சூழல் இங்கு உருவாவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்றே தெரிகின்றது .

முதலமைச்சர் நிதி ஆயோக் கூட்டத்தில் பேசியவை என்ன என்பதைபற்றி சற்றே விரிவாக பார்ப்போம் ..

ஒவ்வொரு முறையும் வாதாடி போராடி எங்கள் உரிமைகளை மீட்டெடுப்பதா என டில்லியில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் முதலமைச்சர் மு க ஸ்டாலின் கடுமையாக குற்றம்சாட்டினார் ,

2030 க்குள் தமிழகத்தில் ஒரு டிரில்லியன் டாலர் (தோராய ம ரூ.85 லட்சம் கோடி) ஈ ட்ட வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்து, செயலாற்றி வரு கிறோம். அதன் பயன்கள்தான் புள்ளிவிவரங்களாக, வளர்ச்சிக் குறியீடுகளாக எதிரொலிக்கின் றன. 2047ல் இந்தியாவின் இலக்கான 30 டிரில்லியன் டாலர் (தோராயமாக ரூ.2,550 லட்சம் கோடி) பொருளாதா ரத்தில். எங்களது பங்களிப்பு வலுவாக இருக்கும் என்று உறுதியளிக்கிறேன். தமிழகம் முழுவதும் தொழில்மயமாகி யுள்ளது. ஆட்டோ மொபைல் முதல் பசுமை ஹைட்ரஜன் வரை வளர்ந்து வரும் எல்லா துறைகளிலும் வலுவான வளர்ச் சியைக் கண்டுள்ளோம்.

இந்த வளர்ச்சியால்தான் நகரமயமாக்கலில் முதன்மை மாநிலமாகத் தமிழகம் விளங் குகிறது. அதிகரித்து வரும் இந்த நகர்ப்புற மக்களுக்கு அடிப்படை வசதிகள், நல்ல உட்கட்டமைப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை வழங்க, நகர்ப்புறங்களின் மேம்பாட்டுக்கு பெருமளவிலான நிதி யைக் கொண்ட ஒரு பெரிய திட்டம் அவசியம். அம்ருத் 2.0 திட்டம் மத்திய அரசு புனரமைப்பிற்கான அடல் இயக்கம், மற்றும் நகர்ப்புற சீரமைப்பு திட்டம் நிறைவடையும் நிலையில் உள்ளது.சிறந்த உட்கட்டமைப்பு இயக்கம் மற்றும் சுகாதாரத்தை மையமாகக் கொண்ட புதிய நகர்ப்புற மறுமலர்ச்சி திட்டம் உருவாக்குவது அவசியம் ,இது போன்ற ஒரு திட்டத்தை விரைவில் நீங்கள் உருவாக்க வேண்டும் .

2047க்குள் 30 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதற்கும் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதற்கும் பிரதமரின் தொலைநோக்கு பார்வை பாராட்டத்தக்கது, கடந்த நிர்வாக குழு கூட்டத்தில் பிரதமர் மாநிலங்கள் மற்றும் மக்களுடன் நேரடியாக இணைந்து இருப்பதால் இந்த தொலைநோக்கு பார்வை அடைவதில் மாநிலங்கள் தீவிர பங்கு வகிக்கின்றன என்று பேசி இருந்தார் .அவரது தொலைநோக்கு பார்வையை அடைவதற்கு கூட்டுறவு கூட்டாட்சி என்பது அவசியமான அடித்தளம் எனவே தமிழகம் உள்ளிட்ட மாநிலங்கள் தங்கள் வளர்ச்சி அடைவதற்கு மத்திய அரசு பாகுபாடு இன்றி ஒத்துழைப்பு தர வேண்டும். நிவி ஸ்ரீ திட்டம் தொடர்பாக கல்வி அமைச்சர் உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சில மாநிலங்கள் கையெழுத்து இடாததால் ஷி ஷி கி நிதி மறுக்கப்பட்டுள்ளது,2024/2025 ஆம் ஆண்டில் ரூபாய் 2200 கோடி மத்திய நிதி தமிழகத்திற்கு மறுக்கப்பட்டுள்ளது இது அரசு பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் (தனியார் பள்ளிகளில் 25 சதவிகித இட ஒதுக்கீடு )

படிக்கும் குழந்தைகளின் கல்வியை பாதிக்கிறது, எனவே தாமதம் இன்றி ஒரு தலைபட்சமான நிபந்தனைகளை வலியுறுத்தாமல் இந்த நிதியை விடுவிக்க வேண்டும்.

மாநிலத்திற்கு தரப்பட வேண்டிய நிதியை எப்போதும் போராடி வாதாடி வழக்கு போட்டு பெற வேண்டிய நிலையில் இருப்பது கூட்டாட்சி இந்தியாவுக்கு அழகல்ல ,இது மாநிலத்தின் வளர்ச்சியையும் பாதிக்கும் இந்தியாவில் வளர்ச்சியையும் பாதிக்கும். 15வது நிதி குழுவின் பரிந்துரைகளின் படி மாநிலங்களுக்கு பகிர்ந்து அளிக்கக்கூடிய வரி வருவாய் பங்கை 41 சதவீதமாக உயர்த்தினார்கள். இந்த பரிந்துரைக்கு மாறாக கடந்த நான்கு ஆண்டுகளில் மத்திய அரசின் மொத்த வருவாயில் 33.16 சதவீதம் மட்டுமே மாநிலங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படுகிறது , மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டங்களுக்கான மாநில அரசின் பங்கு தொகை தொடர்ந்து உயர்ந்து வருகின்றது,இதனால் தமிழகம் போன்ற மாநிலங்களின் நிதி நிலைமையை மேலும் பாதிக்கின்றது.

ஒருபுறம் மத்திய அரசிடம் இருந்து வரவேண்டிய வரிப்பகிர்வு குறைவு மறுபுறம் மத்திய அரசு அறிமுகப்படுத்தும் திட்டங்களுக்கு மாநில அரசு செலவிடும் அதிக நிதி ஆகிய இரண்டுமே மாநில அரசுகளுக்கு பெரும் சுமையை ஏற்படுத்துகின்றன , எனவே மத்திய வருவாயில் மாநிலங்களுக்கான வரி பகிர்வின் பங்கு 50 சதவீதமாக உயர்த்தப்பட வேண்டும் இவ்வாறு முதலமைச்சர் மு க ஸ்டாலின் வலியுறுத்தினார்.

## ஆங்கிலத்தில் பெயர் சூட்டுங்கள்

முதல்வர் ஸ்டாலின் மேலும் பேசும்போது, "சுத்தமான கங்கை திட்டம்', கங்கை நதியை மேம்படுத்துவதிலும், மீட் டெடுப்பதிலும் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளது. தமிழகத்தில் காவிரி, வைகை, தாமிரபரணி உட்பட முக்கியமான ஆறுகளையும், நாட்டிலுள்ள பிற முக்கியமான ஆறுகளையும் சுத்தம் செய்து மீட்டெடுக்க இதேபோன்ற திட்டம் தேவை எனவே, காவிரி, வைகை, தாமிரபரணிக்கு புதிய திட்டத்தை உருவாக்கித் தர வேண்டும். இந்தத் திட்டங்களுக்கு எல்லாம். எல்லா மாநிலங்களுக்கும் தொடர்பு மொழியாக இருக்கும் ஆ கிலத்தில் பெயரிட வேண்டும். அவற்றை மாநிலங்கள் தங்களது மொழியில் மொழிப்பெயர்த்துக் கொள்வார்கள்' என்றார்.

எது எப்படியோ எதிர்க்கட்சிகள் கூறுவது போல தமிழக முதலமைச்சர் சமரசம் பேசுவதற்காக டெல்லிக்கு சென்றாரா அல்லது உண்மையாகவே தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய நிதிகளுக்காக அங்கு சென்று போராடி அவற்றை பெற்று வந்தாரா என்பது வரும் நாட்களில் தெளிவாக தெரிந்து விடும்

**சங்கரராமன் RB**
**உள்ளடக்க எழுத்தாளர்**
**திருச்சி**




# "மகிழ்ச்சி திட்டம்"

காவல்துறை தலைமை இயக்குநர் / தலைமை படைத்தலைவர் அலுவலகம், சென்னை.

"மகிழ்ச்சி திட்டம்"

தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனம் (NIMHANS) மற்றும் எம்.எஸ். செல்லமுத்து ஆராய்ச்சி மற்றும் அறக்கட்டளை ஆகியோருடன் இணைந்து, காவல்துறை நிறைவாழ்வுத் (Well being) திட்டத்தின் தொடர்ச்சியாக "மகிழ்ச்சி"திட்டம் (அதிகப்படுத்தும் திறன், வளர்ச்சி, வாழ்க்கை தரத்தை உயர்த்துதல், தேர்வுகள் மற்றும் சுதந்திரம்) உருவாக்கப்பட்டுள்ளது. மனநல மருத்துவர்கள், உளவியலாளர்கள் மற்றும் சமூகப் பணியாளர்களைக் கொண்ட பல்துறை குழுவை உள்ளடக்கி காவல்துறை ஆளிநர்களின் மன நலனை உறுதி செய்வதற்கான ஒரு முழுமையான அணுகுமுறையை இந்த திட்டம் உருவாக்குகிறது.

2. நாட்டிலேயே இவ்வகையிலான நலத்திட்டத்தை தமிழ்நாடு மாநில காவல்துறையில் தான் முதன் முதலாக தொடங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் இந்த மகிழ்ச்சி நலத்திட்டத்தினை பாராட்டி ஊக்குவித்துள்ளார். மேலும் மனநல மற்றும் சிகிச்சைக்காக தமிழக அரசு மூன்று மையங்களுக்கு ரூ. 1.15 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளது.

3. சென்னை குருநானக் கல்லூரியில், சென்னை பெருநகர காவல் துறையினருக்கான ஒரு முன்னோடித் திட்டத்தை, காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் படைத்தலைவர் திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப., சென்னை பெருநகர காவல் ஆணையராகப் பணியாற்றிய போது, 20-11-2021 அன்று தொடங்கி வைத்தார். இந்தப் புதுமையான நலத்திட்ட முயற்சிக்காக, தமிழக அரசு, அரசு ஆணை எண்.302, உள் துறை, நாள் 21.06.2022 ஆணையின் படி, இரண்டு ஆண்டுகளுக்கு ரூ. 53.00 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது.

4. இந்த "மகிழ்ச்சி" திட்டம் மன அழுத்தம், தற்கொலை எண்ணம், மதுப்பழக்கம் / ஆன்லைன் சூதாட்ட அடிமையாதல், மன அழுத்தம் மற்றும் பதட்டம், துக்கம், குடும்பம் மற்றும் திருமண முரண்பாடு, நடத்தை பிரச்சினைகள் (அதீத கோப மனப்பாண்மை, பணிக்கு தொடர்ந்து வராமல் இருத்தல் போன்றவை) ஆகியவற்றிலிருந்து காவல் ஆளிநர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கும், மன அழுத்தத்தால் எழும் அனைத்து வகையான பிரச்சினைகளுக்கு எதிராகவும், மனநலனை மேம்படுத்துவதற்கும் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேற்படி மனநல மையங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகள் போன்ற பிற அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு தேவைப்படும் காவல் ஆளிநர்களுக்கு உரிய உதவி மற்றும் ஆதரவை வழங்குகிறது. 01.05.2025 நிலவரப்படி, சென்னை, மதுரை மற்றும் திருவாரூரில் தற்போது செயல்பட்டு வரும் 3 மையங்களிலிருந்து 2844 காவல் ஆளிநர்கள் பயனடைந்துள்ளனர் (ஆண்கள் 1884; பெண்கள் 960).

5. இந்த திட்டம் முதலில் ழிமிவிபிகிழிஷி அறிக்கை மற்றும் காவல்துறையின் ஏனைய வழிகள் மூலம், மனநலம் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணப்பட்டு, அவர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். பின்னர், மதிப்பீட்டிற்காக (Assessment) காவல் ஆளிநர்களை மருத்துவமனைக்கு வருமாறு அறிவுறுத்தி சம்மந்தப்பட்ட காவல் நிலையங்கள் / பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. மேற்கண்ட சிகிச்சை காலங்களை காவல் ஆளிநர்கள் காவல் நிலையங்களில் 'பணியில்' இருப்பதாகக் கருதப்படுகிறது. மருத்துவமனையில் சிகிச்சைக்கு உட்படும் காவல் ஆளிநர்களை தரப்படுத்தப்பட்ட படிவங்களை (Standardised format) பயன்படுத்தி, இடைக்கால மதிப்பாய்வுகள் மற்றும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு தேவைப்படின் தொடர் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. குடும்ப உறுப்பினர்களும் இதில் ஈடுபட்டுத்தப்பட்டு சிகிச்சையில் உள்ளவர்களை கண்காணிக்க உரிய பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. இச்சிகிச்சையில் துக்கம் மற்றும் உளவியல் ரீதியான காயங்கள், மனச்சோர்வு, நடத்தையில் மாற்றம், போதைக்கு அடிமையாகுதல் உள்ளிட்டவை அடங்கும். மேலும் குழு சிகிச்சை, தம்பதியர் / குடும்ப ஆலோசனை, மனநல மருத்துவம், உள்நோயாளியாக நச்சு நீக்கம் / மறுவாழ்வு

போன்றவையும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த சிகிச்சைகள் அனைத்தும் முற்றிலும் தன்னார்வமானவை மற்றும் எந்த கட்டாயமும் இல்லை.

6. இத்திட்டம் காவலர்களிடையே மிகுந்த ஆதரவும், நல்ல வரவேற்பும் பெற்ற காரணத்தினால் தமிழக காவல்துறையில் தென் மண்டலத்தில் உள்ள 10 மாவட்டங்கள், மதுரை மற்றும் திருநெல்வேலி நகரங்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டு மதுரையில் 15.02.2024 அன்று மகிழ்ச்சி மையம் ரூ.30.50 இலட்சத்தில் தொடங்கப்பட்டது. மேலும் இந்த மகிழ்ச்சி திட்டமானது மத்திய மண்டலத்தில் உள்ள 9 மாவட்டங்கள் மற்றும் திருச்சி மாநகரத்துக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டு திருவாரூரில் 02.08.2024 அன்று இத்திட்டம் ரூ.30.50 இலட்சத்தில் தொடங்கப்பட்டது. (அரசு ஆணை நிலை எண் 649 உள் (காவல் 9) துறை நாள் 26.11.2024) மேற்கண்ட இரண்டு மகிழ்ச்சி மையங்களையும் காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் படைத்தலைவர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது.

7. இந்தத்திட்டத்தின் வெற்றி மிகவும் தெளிவாகத் தெரிவதாலும், தனிநபர் நல்வாழ்வு மற்றும் தொழில் முறை திறன்களை மேம்படுத்தியதாலும், மாண்புமிகு முதலமைச்சரின் 29.04.2025 நாளிட்ட அறிவிப்பின்படி சேலம், திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 8 மாவட்டங்கள் மற்றும் சேலம், திருப்பூர், கோயம்புத்தூர் நகரங்கள் உட்பட மேற்கு மண்டலத்தில் உள்ள காவல் ஆளிநர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு காவல்துறை மற்றும் மதுரை எம்.எஸ். செல்லமுத்து அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் இணைந்து கோவையை மையமாக கொண்டு 24.05.2025 அன்று முற்பகல் திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப., காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் படைத்தலைவர் அவர்களால் கோவை பீளமேட்டில் உள்ள பி.எஸ்.ஜி. ஆர். கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரியில் துவக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக கோவை ஆயுதப்படை வளாகத்தில் 'ஆரோக்கிய மையம்' (Wellness centre) திறக்கப்பட்டது.

8. இந்த மகிழ்ச்சி திட்டம் காவல் துறையில் பணிபுரியும் ஆளிநர்களுக்கு பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலை வழங்குவதன் மூலம் காவல் துறையினரின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும், அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பவும், தனிப்பட்ட முன்னேற்றம் மற்றும் பணி செயல்திறனை மேம்படுத்தவும் உதவுகிறது. இத்திட்டம் குறித்து காவல் நிலையங்கள் மற்றும் காவல் குடியிருப்புகளில் விளம்பரப்படுத்தப்பட்டு நான்கு மையங்கள் குறித்த தொலைபேசி உதவி எண்கள் அளிக்கப்பட்டுள்ளன. (சென்னை 6380977682, மதுரை 7305033041, திருவாரூர் 9342189898 மற்றும் கோயம்புத்தூர் 9500334416).

# தேசிய திராவிட மோதல்?



Amrit Bharat: மத்திய அரசு விழாவில் முதல்வருக்கு நன்றி கூறிய திமுக எம்எல்ஏ;

ஆவேசமான பாஜக நிர்வாகி

அமிர்த பாரத் (Amrit Bharat Station) திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட ரயில் நிலையங்களை பிரதமர் நரேந்திர மோடி நேற்று காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

அதன் ஒரு பகுதியாக, அந்த திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட ஸ்ரீரங்கம் ரயில் நிலையத்தையும் பிரதமர் நரேந்திர மோடி காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். இதற்கான நிகழ்ச்சி ஸ்ரீரங்கம் ரயில் நிலையத்தில் நடைபெற்றது.

இதில், திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் பழனியாண்டி, திருச்சி எம்.பி துரை வைகோ, திருச்சி ரயில்வே கோட்ட மேலாளர் அன்பழகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அதேபோல், பொதுமக்கள், பா.ஜ.கவினர் உள்ளிட்ட பலரும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இந்நிலையில், இந்த நிகழ்ச்சியில் பேசிய ஸ்ரீரங்கம் திமுக சட்டமன்ற உறுப்பினர் பழனியாண்டி, "திருச்சி மாவட்டத்தில் மிகச்சிறந்த பேருந்து நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

அந்தப் பேருந்து நிலையம் திறக்க காரணமாக இருந்த மாவட்ட ஆட்சியர், பேருந்து நிலையத்தை திறந்த முதலமைச்சர் உள்ளிட்டோருக்கும் அதேபோல திருச்சி மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்திய முதலமைச்சருக்கும் நன்றி" என்று பேசினார்.


அப்போது, பழனியாண்டி பிரதமருக்கு நன்றி தெரிவிக்கவில்லை என கூறி அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பா.ஜ.க பிரமுகர் திருவேங்கடம் என்பவர் திடீரென எழுந்து பழனியாண்டி பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து, "பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவியுங்கள்" என கூறினார்.

அதைக்கேட்ட எம்.எல்.ஏ பழனியாண்டி, "யாருக்கு நன்றி சொல்ல வேண்டும் என்று எனக்குத் தெரியும். நீ உட்கார்" என்று கூற, கார சார வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் நிகழ்ச்சியில் சிறிதுநேரம் பரபரப்பு ஏற்பட்டது.

சில நேரங்களில்
காதை மூடிக்கொள்வதும்
நல்லதே.....



# ஒரு சந்தர்ப்பத்தை நீங்கள் தவற விட்டால் மறு சந்தர்ப்பத்தை நீங்களே உருவாக்கி கொள்ளுங்கள்...




கொலம்பியா பல்கலைக்கழகம். கணித பேராசிரியர் வகுப்பில் பாடத்தை துவக்கிய சில நிமிடங்களிலேயே அந்த மாணவனுக்கு, உறக்கம் கண்களை சொக்கிக் கொண்டு வந்தது. அவனையும் அறியாமல் உறங்கிப்போனான்.

திடீரென மற்ற மாணவர்களின் சல சலப்பு சத்தம் கேட்டு கண் விழித்தான். கணித வகுப்பு முடிந்து பேராசிரியர் வெளியேறி இருந்தார். உறங்கியதை நினைத்து வெட்கப் பட்டுக்கொண்டே கரும்பலகையைப் பார்த்தான்.

அதில் பேராசிரியர் கரும்பலகையில் இரண்டு கணித பாடங்களை கேள்வியாக எழுதி வைத்திருந்தார். அவனுக்கு புரிந்தது, ஆசிரியர் அசைன்மெண்ட் கொடுத்திருக்கிறார். உடனே தன்னுடைய நோட்டில் அந்த இரண்டு கணித கேள்விகளையும் எழுதிக்கொண்டு வீட்டிற்கு வந்தடைந்தான் மீண்டும் இரண்டு நாள் கழித்துத்தான் கணித வகுப்பு வரும், அதற்குள் எப்படியாவது விடை எழுத வேண்டும் என மனதில் நினைத்து, அதற்கு தயாரானான். எத்தனை முறை எழுதிப்பார்த்தாலும் அதற்கான விடை கிடைக்க வில்லை. வகுப்பறையில் பாடத்தை கவனிக்காமல் தூங்கி போனது எவ்வளவு தவறு என நினைத்து வருந்தினான்.

தொடர்ந்து அந்நகரின் புகழ்பெற்ற நூலகத்திற்கு சென்று பல புத்தகங்களை புரட்டி அதிக சிரத்தையுடன் போராடியதன் விளைவாக, போட்டு போட்டு பார்த்து பல சூத்திரங்களை பயன்படுத்தி இறுதியில் அதற்கான விடையை கண்டு பிடித்தான். அப்பொழுது கூட அவ்வளவு முயற்சி செய்தும் ஒரு கேள்விக்கான விடை மட்டுமே கிடைத்தது. மற்றொரு கேள்விக்கான விடை மட்டும் காண முடியவில்லை. அதற்கான நேரமும் கிடைக்கவில்லை. மற்றொரு கேள்விக் கான விடை எழுதாமல் போனால் பேராசிரியர் கடுமையாக திட்டுவாரே என்ற பயமே அவனுக்கு அதிகமாக ஆக்கிரமித்தது. ஒருவாறு பயந்தபடியே வகுப்பறைக்குச் சென்றான். கணிதப் பேராசிரியரும் வகுப்பிற்குள் நுழைந்தார். வந்ததும் பாடங்களை ஆரம்பித்தார்

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு வேளை பேராசிரியர் அசைண்ட்மெண்ட் கொடுத்ததையே மறந்து விட்டாரோ என எண்ணி, எழுந்தான் சார் என்றான், அவர் இவனைப்பார்த்து என்ன என்பது போல் பாவனை செய்ய, நீங்க அசைண்ட்மெண்ட் கொடுத்த இரண்டு வினாக்களில் ஒன்றுக்கு விடை எழுதி விட்டேன். இன்னொன்றுக்கு விடை எழுத நேரமில்லை. எனக்கு இரண்டு நாள் அவகாசம் கொடுத்தால் எப்படியும் எழுதி விடுவேன் என்றான். அவர் இவனை ஆச்சரியமாகப் பார்த்து, என்ன சொல்கிறாய்? நான் எதுவும் கொடுக்கவில்லையே... நீ இதில ஒன்னுக்கு விடை வேறு எழுதி விட்டேன் என்கிறாயே, வா வந்து காட்டு என்றார்.

மாணவன் காட்டினான். அதை படிக்க, படிக்க பேராசி ரியரின் கண்கள் ஆச்சரியத்தில் அகல விரிந்தது. பட படப்பாக நீ எப்படி விடை கண்டு பிடிச்ச? என்றார். இவன் பயத்தில் உண்மையை ஒப்புக் கொண்டு, அவன் தூங்கியதையும் மற்ற மாணவர்களிடம் கேட்டால் மாட்டிக்கொள்வோம் என்ற பயத்தில் நானாகவே சில நாட்களாக, பல புத்தகங்களை படித்து, விடை எழுதினேன். என்றான். பேராசிரியர், உலகில் மிகச்சிறந்த கணித வல்லுனர்களாலும் கண்டுபிடிக்க முடியாத பல கணக்குள் உள்ளன, அவற்றில் இரண்டை உங்களுக்கு எழுதி காண்பிக்கிறேன் என்று தான், நான் இதை கரும் பலகையில் எழுதி வைத்தேன். ஆனால் நீயோ, இதற்கு விடையை கண்டுபிடித்திருக்கிறாய் என ஆனந்தத்தோடும் பிரம்மிப்போடும் அவனை ஆரத்தழுவினார்.

அந்த மாணவர் தான், பின்னாளில் உலகப்புகழ் பெற்ற அமெரிக்க கணிதவியலாளர். **ஜார்ஜ் பெர்னார்டு டான்சிக்**

அவர் பின்னாளில் மாவர்களிடையே உரையாற்றிய பொழுது. சில நேரங்களில் நாம் தவற விட்ட சந்தர்ப்பங்கள் தான், நம்மை முன்னேற்றும் படிக்கற்களாக அமைகின்றன. இதற்கு யாராலும் விடை கண்டுபிடிக்க முடியவில்லை என்ற பேராசிரியரின் வார்த்தைகள் என் காதுகளுக்கும் விழுந்திருக்குமேயானால், என்னுடைய உளவியலும், நம்மாலும் இது முடியாது என்ற நிலைமைக்கு தள்ளப்பட்டு இருக்கும். ஆனால் நான் பாடத்தை கவனிக்காமல் தவற விட்டு விட்டோமே என்ற குற்ற உணர்ச்சியே என்னை போராட வைத்தது. அதுவே சிக்கலான கேள்விக்கு விடையை காண முடிந்தது.. சில நேரங்களில் நீங்கள் காதுகளை மூடிக்கொள்வதும் நல்லதே. மற்றவர்களின் விமர்சனங்களை கண்டுக்கொள்ளாமல் இருப்பதும் நல்லதே. ஆகவே ஒரு சந்தர்ப்பத்தை நீங்கள் தவற விட்டால், மறு சந்தர்ப்பத்தை நீங்களே உருவாக்குங்கள். ஒவ்வொரு மனிதனும் விஞ்ஞானியாவதும், அஞ்ஞானியாவதும் காலத்தின் கைகளில் இல்லை. உங்கள் ஞானத்தின் கைகளில் உள்ளது.

**கவிஞர்.க.கந்தன்.** உள்ளடக்க ஆசிரியர்.



# தவெக கட்சியினர் புலம்பல்



ஆரணியில் தவெக அலுவலக திறப்பு விழாவிற்கு கட்சியினரை காலை முதல் மாலை வரை காக்க வைத்த புஸ்ஸிஆனந்த்.கட்சியினர் புலம்பல்.

ஆரணிசேத்துப்பட்டு சாலையில் தமிழக வெற்றிக்கழகத்தின் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அலுவலக திறப்பு விழாவிற்கு மாநில பொதுச்செயலாளர் புஸ்ஸிஆனந்த் காலை முதல் மாலை வரை கட்சியினரை காக்க வைத்து பின்னர் திறந்து வைத்ததால் கட்சியினர் சோர்வடைந்து வெறுத்து காணப்பட்டனர்.

ஆரணி சேத்துப்பட்டு சாலையில் தமிழக வெற்றி கழகத்தின் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அலுவலக திறப்பு விழா மே 26 அன்று காலை 9 மணி அளவில் மாநில பொதுச் செயலாளர் புஸ்ஸிஆனந்த் திறந்து வைக்கிறார் என கட்சியினர் அறிவித்தனர். இதனால் தமிழக வெற்றி கழகத்தினர் ஆரணி நகரம், ஆரணியை சுற்றிள்ள கிராமங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கானோர் திரண்டு வந்தனர். தவெக மாவட்டசெயலாளர் சத்யா அனைவரையும் வரவேற்று சிறிது நேரத்தில் வந்துவிடுவார் என்று அனைவரிடமும் கூறிக்கொண்டே வந்திருந்தார். நேரம் 12 மணி ஆகியும் வராததால் கட்சியினர் வெயிலில் நீண்ட நேரம் நின்றுகொண்டே இருக்கிறோம் எப்போதுதான் வருவார் என கேட்டதற்கு மாவட்ட செயலாளர் பொதுச்செயலாளர் மேல்மலையனூர் கோயிலுக்கு சென்றுள்ளார். இப்போதுதான் புறப்படுகிறார் சிறிது நேரத்தில் வந்துவிடுவார் என்று தெரிவித்தனர். இதனையும் பொறுத்துக்கொண்டு கட்சியினர் மீண்டும் காத்திருந்தனர். நேரம் ஆக, ஆக அனைவருக்கும் பசி மயக்கம் ஏற்பட்டது. பின்னர் 2 மணி ஆனதும் மாவட்டசெயலாளர் அனைவரும் உணவு அருந்துவிட்டு வாருங்கள் தலைவர் வந்துவிடுவார் என்று கூறினார். புதியதாக துவங்கப்பட்ட கட்சி என்பதால் கட்சியினர் சோர்வடைந்து அங்கேயே உணவு வாங்கிவரக்கூறி சாப்பிட்டனர். 3 மணி ஆகியும் மாநில பொதுச்செயலாளர் வராததால் அனைவரும் வெறுத்துப்போய் வருவாரா வரமாட்டாரா என கேள்வி எழுப்பினர். பின்னர் ஒரு வழியாக மாலை 4 மணி அளில் ஆரணி நகரத்திற்குள் புஸ்ஸிஆனந்த் வந்துவிட்டார் அனைவரும் தயாராக இருங்கள் என கூறினர். பின்னர் அலுவலகம் திறக்க மாலை 4.30 மணி அளவில் ரிப்பன் வெட்டியும், குத்துவிளக்கு ஏற்றியும் துவக்கி வைத்தார். அங்கு காத்திருந்த செய்தியாளர்களிடம் காத்திருங்கள் என கூறியதால் செய்தியாளர்கள் அனைவரும் மைக்குகளை தயார் செய்து வைத்திருந்தனர். பின்னர் மேடையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நலதிட்ட உதவிகளை ஏழைகளுக்கு வழங்கினார். பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பை வேண்டாம் என கூறிவிட்டு சென்றுவிட்டார். கட்சியினரும் ஏமாமாற்றம் அடைந்து செய்தியாளர்களும் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

**ஜெயச்சந்திரன்**
**மாவட்ட செய்தியாளர் ஆரணி**

# கடிகாரம் !!!

மேற்கே வானில்
பகலை
மெல்லப் புதைப்பது யார் ?
ஒ ! இரவா ?
வருக இரவே ! வருக !
ஆசைக்கு
இணங்காதப் பகலை
எத்தனை
ஜென்மம் தான்
கொல்வாய் ? இன்னும்.
கேள், இரவே ! கேள்
வெந்துக்கொண்டே
வெளிச்சம் தரும்
தியாக சிருஷ்டி ,பகல்.
உன்னிலிருந்து
விதை வெடித்து ,
கிளைப்பரப்பி ,
அன்றே வாழ்ந்து
வயதாகிக் காயும்
வேத விருட்சம் !
கருவிதவை சிலந்திப் போலன்றி
கருணைக் காட்ட மாட்டாயா ?
ச்ச்ச்சீ..
இரக்கமற்ற இரவே !
உன் வரவேற்பு விழாவை
என் வரவேற்பு அறைக்குள்
ஒருங்கேப் புறக்கணிப்போம் ,
நானும் ,
என் சன்னல்
திரைச்சீலையும்
ரவியில்
முகம் தோய்த்து
மஞ்சள் படர்ந்த வானில்
ஆடைகள் அவிழ்த்தெறிந்து
அங்குமிங்கும் அலைந்தாள்
உன் சக்களத்தி
நிலா.
களைப்பாற வந்த
நட்சத்திர ராட்சசர்கள்
இளைப்பாறா இச்சைகளை
எச்சில் வழிச் சொட்டவிட்டு
கொல்லிப் பலாச்சுளைபோல்
அவளை எள்ளி மொய்த்தெடுக்க...

அன்றைய ராத்திரிக்கும்
அவளே விருந்தானாள்

முற்றும் துறந்தான்
போலே ,
சீலையைச்
சற்றும் விலக்காமல்
அரைகுறையாய்
அவளை அனுமதித்துக்
கடிகாரம் பார்த்தேன்
கடிகாரம் சொன்னது
டிக்,டிக்
டிக்,டிக்
டிக்,டிக்
என்ன சப்தமது ?
ஆளுமையின் அதட்டல் ஒலியா ?
எதற்கான அறைகூவலது ?
வாழ்வியல் போருக்கான
ஆயத்தப் பறையா ?


ஒருவேளை ,ஏகாந்தத்தின்
இருதய துடிப்பு
இதுதானோ ?

இந்த நொடியிலிருந்து விடுவித்து
அடுத்த நொடிக்குள்
என்னைக் கடத்திச் செல்லும்
ஆச்சரிய மந்திரம்

நிழல் போல் நகரும்
காலத்தை உன்
சப்தத்தில் அடக்கும்
சமன்பாடு
சாணக்யன் தந்திரம் .

ஆக்கம்
மரு.அப்துல் ரஹ்மான்

# குளம் போல் தேங்கி நிற்கும் மழை நீர் ஊராட்சி நிர்வாகம் தூங்குகிறதா.?



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம் நைனாரகரம் ஊராட்சி மாட்டுச்சந்தைக்கு தென்புறமாக உள்ள கிழமேல் தெருவில் மழை நேரங்களில் தண்ணீர் தேங்கி குளம் போல் காட்சியளிக்கிறது


இதனால் கொசு உற்பத்தியாகி நோய் தொற்று பரவும் அபாயம் உள்ளது இது சம்பந்தமாக நயினாரகரம் ஊராட்சி மன்ற தலைவரிடமும் ஊராட்சி செயலாளரிடமும் தெரிவிக்கப்பட்டு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

தற்போது கோவில் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது வெளியூரில் இருந்து அதிகமான பொதுமக்கள் கலந்து கொள்வார்கள்

ஏற்கனவே இந்த தெருவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அதை மற்றொரு தெருவிற்கு மாற்றம் செய்து விட்டதாகவும் பொதுமக்கள் குற்றச்சாட்டு வைக்கின்றார்கள்

மாவட்ட நிர்வாகம் உடனடியாக பொதுமக்களின் நலனின் கருதி போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமா பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

Printed Published and Owned by S. SATHEESH KUMAR Published From Old No.119,New No 198,V.M. Street Mylapore, Chennai-600004. Printed at JM PROCESS, NO.29, V.N.Dass Road Border Thottam, Mount Road, Chennai- 600002.
EDITOR: S.SATHEESH KUMAR








# குரு பரம்பரை

பகவான் ஸ்ரீ ராமானுஜர் குரு பரம்பரையில் வந்தவர். அவரை நாம் அறிய முற்படும்முன் குரு பரம்பரை பற்றி கட்டாயம் அறிந்து கொள்ள வேண்டும். குரு பரம்பரை என்பது, ஒருவரின் ஆன்மீக வழிகாட்டி. இது, ஒருவரின் ஞானத்தை வளர்க்கவும், ஆன்மீக முன்னேற்றத்தை அடையவும் உதவுகிறது. குரு பரம்பரை, இந்து சமயத்தில் ஒரு முக்கிய அங்கமாக உள்ளது.

குரு பரம்பரை என்பது, குருசாது பரம்பரை என்றும் அழைக்கப்படுகிறது. இது, ஒரு குருவிடமிருந்து மற்றொரு குருவிற்கு ஆன்மீக அறிவை கடத்துவதைக் குறிக்கிறது.

குரு பரம்பரையின் மூலம், ஒரு மாணவன் தனது குருவின் ஞானத்தை பெற்று, ஆன்மீக ரீதியாக முன்னேற முடிகிறது. குரு பரம்பரை என்பது, இந்து சமயத்தில் ஒரு முக்கியமான மரபு ஆகும்.

இந்து குரு பரம்பரை அமைப்பில் வேத வேதாந்த சாத்திரங்களை குருவானவர், தன் சீடர்களுக்கு வாய் மொழியாக கற்றுத்தருவார்.

அதை சீடர்கள் மனதில் நன்கு இருத்தி, எப்போதும் அதைப் பற்றியே சிந்தித்து கொண்டே இருந்து, ஐயம் திரிபுறக் கற்று, தனது குருவிற்குப் பின் தனது சீடர்களுக்கு அதே கல்வியை, தன் குரு தனக்கு உபதேசித்தபடி கற்றுத் தரவேண்டும். இவ்வாறாக வேத வேதாந்த சாத்திரங்கள் எவ்வித மாற்றமுமின்றி வாய்மொழி மூலமாக மட்டுமே குருவிடமிருந்து சீடர்களுக்கு, குரு பரம்பரையில் காக்கப்பட்டு வருகிறது.

சுய அறிவு என்பது நமது அனைத்து கட்டுப்பாடுகள், ஆசைகள் மற்றும் மாயைகளை எரிக்கும் ஒரு 'சுடர்விடும் நெருப்பு' ( ஞானஅக்னி ) போன்றது . குருசிஷ்ய பரம்பரா (ஆசிரியர்மாணவர் பரம்பரை) மூலம், இந்த சுய அறிவுச் சுடர் வரலாற்றுக்கு முந்தைய காலங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டு வருகிறது. குரு.. சீடனில் ஒரு சுடரை ஏற்றுகிறார். சாதனா மூலம் சீடன் உணர்தலைப் பெற்று அடுத்த தலைமுறை தேடுபவர்களில் சுடரை ஏற்றி வைக்கிறார். எனவே, பிரம்மவித்யாவைப் பாதுகாத்து பரப்புவதில் குருசிஷ்யபரம்பரை மிக முக்கியமானது.

யமுனாச்சாரியராக இருந்து ஆளவந்தார் என பெயர்மாற்றம் பெற்ற குரு ஒருவர் தனக்கு அடுத்த இடத்தில் இராமானுஜரைத் தேர்ந்தெடுத்தார். பொதுவுடைமை பேசி மக்களின் நல்வாழ்வு சிறக்க குரு பரம்பரையில் வந்த அனைவரும் பாடுபட்டனர்.



**உடையவர் தொடர்வார்.....**

**ச.சிவகுருநாதன்**





14.05.2025 அன்று மயிலாப்பூர் இந்திரா பிராஸ் பூஜா மெட்டல் ஸ்டோர்ஸ் உரிமையாளர் *சிவராமன் பால்ராஜ் நாடார்* அவரது பிறந்தநாளுக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கும் போது எடுக்கப்பட்ட புகைப்படம் பிறகு இனிப்புகள் வழங்கப்பட்டது.

**என்றும் அன்புடன்**

**உ.சிவபிரகாஷ்**

# SOWDAMBIKAA®
## GROUP OF SCHOOLS

Dr.S.Ramamoorthiy
Chairman

**Congratulations for All Round Performances in Board Exams !**

### Top Performers CBSE Grade XII

SCIENCE DISTRICT TOPPER
ROHITH V. 491 / 500

| Name | Marks |
|---|---|
| KAVIN M. | 483 |
| VARUN M. | 474 |
| SRI RAGHAV PRASATH J. | 472 |
| HARINI S. (BIOLOGY 100 / 100) | 470 |
| SAMIN AFEED R. | 469 |
| ANN JOYCE S. | 468 |
| MANISHA M. | 466 |
| HASINI S. | 465 |
| YASVANTH T. | 465 |
| EZHIL NITHI D. | 464 |
| SAI AADHINATH G J. | 464 |
| NILAVARASI N. | 463 |
| ABIRAMI ANANDAKUMAR | 463 |
| JANANI K S. | 461 |

450 & Above 45

### Top Performers STATE BOARD Grade XII

| Name | Marks | Centums |
|---|---|---|
| THAMARAISELVAN K. | 595 / 600 | 2 CENTUMS |
| JAYASREE B. | 594 | 2 CENTUMS |
| HASINI E. | 593 | 2 CENTUMS |
| PREETHI P. | 593 | 2 CENTUMS |
| RAVIKANTH S R. | 592 | 2 CENTUMS |
| SANTHOSH M J. | 591 | 2 CENTUMS |
| MANOJ P. | 591 | 1 CENTUM |
| MIRUDULAGESHINI A. | 590 | 1 CENTUM |
| BHUVANESHWARAN M. | 590 | 1 CENTUM |
| SRINIVASA RAGAVAN V. | 590 | |

TANISHA S.
Engineering Cut off **200 /200**
Physics - 100
Chemistry - 100
Mathematics - 100

590 & above 10 | 585 & above 47 | 580 & above 102 | 550 & above 464

### Top Performers CBSE Grade X

| Name | Marks | Centums |
|---|---|---|
| IVAN KOSHY RAJAN | 491/500 | 1 CENTUM |
| REEMA SAFIYYAH S. | 490 | 1 CENTUM |
| ARADHANA G L. | 489 | 2 CENTUMS |
| MOHAMED FARISH S. | 488 | 1 CENTUM |
| KIRAN KENDRICK A. | 487 | 1 CENTUM |
| SRIVAS N M. | 485 | 1 CENTUM |
| KISHORE B. | 484 | 1 CENTUM |
| YASHWANTH N S. | 484 | 1 CENTUM |
| DANYATHA S. | 484 | |
| DHARSHNI S P. | 484 | |
| FAAZIL AHAMED S. | 484 | |
| SAHANA P S. | 483 | |

480 & Above 17 | 450 & Above 138

### Top Performers STATE BOARD Grade X

| Name | Marks | Centums |
|---|---|---|
| PRAVALIKIHA S. | 496 / 500 | 2 CENTUMS |
| HARIPRASATH V. | 495 | 2 CENTUMS |
| PON VIHASINI P. | 495 | 3 CENTUMS |
| SOUNDARYA S. | 495 | 2 CENTUMS |
| YUVASHREE K | 495 | 2 CENTUMS |
| VIDYA R. | 495 | 2 CENTUMS |
| SANJUVIKASINI R M | 493 | 1 CENTUM |
| DANIEL SANTHOSH D. | 493 | 1 CENTUM |
| BRINDHA A. | 493 | 2 CENTUMS |
| RAGAVI A. | 493 | 2 CENTUMS |
| BRAHMMAADHITHAN S V. | 492 | 1 CENTUM |
| PRADEEP KUMAR M. | 492 | 2 CENTUMS |

490 & Above 26 | 480 & Above 102

Merit Scholarship Based on Grade X Marks

Modern Transport Facility Available

**ADMISSIONS OPEN KG - GRADE XI EXCLUSIVE HOSTEL FACILITIES FOR BOYS & GIRLS**

CBSE STREAM: TRICHY 73388 23543 | THIRUVERUMBUR 73977 83078 | THURAIYUR 97507 79444 | MUSIRI 97507 83444
THOTTIYAM (KG -X) 97507 93444 | JAYANKONDAM (KG -IX) 91501 97788

MATRIC STREAM: TRICHY (THIRUVERUMBUR 97507 99444| ANNAMALAI NAGAR 97507 89444 | CRAWFORD 73737 22047
NAGAMANGALAM 96776 99933 )THURAIYUR 97507 96444| THOTTIYAM 97507 00605 | THATHIENGARPET 73737 22043

## SOWDAMBIKAA ACHIEVEMENTS - 2024-25

TOP INSTITUTION, MOULDING STUDENTS TO EXCEL IN NEET/JEE

MEDICAL Through NEET - 146 Students

**ADMISSIONS OPEN for Long Term NEET 2026 Repeaters Batch**

## SOWDAMBIKAA® ACADEMY

Trichy City Centre
Near Kalaignar Arivalayam, TRICHY - 2.
97139 92139 | 97139 94139

Thuraiyur Campus
( Exclusive Hostel Facility for Boys & Girls )
THURAIYUR, TRICHY Dt.
97507 96444 | 97507 82444